தமிழாசிரியர்கள் "தொனி" என்ற கருத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவாராயினும் அதனைப்பற்றிய ஆராய்ச்சி தொல்காப்பியர் காலத்திற்குப்பின் தமிழ்நாட்டில் அரிதாகிவிட்டது. தொனியைத் தொல்காப்பியனார் இறைச்சி என வழங்குகின்றார். உரையாசிரியர்கள் காலத்தில் இதன் உண்மைவடிவம் தெளிவாக விளங்காமல் மழுங்கத் தொடங்கியது. தொல்காப்பிய மரபு இடைக்காலத்தில் வழக்கில் இல்லாது பல ஆண்டுகள் மறைந்திருந்தமையாலேயே இந்த இடர்ப்பாடு எழுந்தது. ஆனால் இந்தக் கருத்தினை வடமொழியில் ஆனந்தவர்த்தனர் என்ற பெரியார் "த்வந்யாலோகம்" என்ற நூலில் விளக்கமாக நிலைநாட்டியுள்ளார். இக்கருத்தினை அதன் உரையாசிரியர் அபிநவகுப்தர் பரக்கப்பேசி விரித்துரைத்துள்ளார். அணிகளின்தொகையைப் பெருக்கிக்கொண்டே போதலில் முனைந்த தமிழ்நாடு தொல்காப்பியர் வெட்டிய இறைச்சி வாய்க்கால் இவ்வாறு வெள்ளமெடுத்தோடுவதனை அறியாமல் இருந்தது. த்வந்யாலோகத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமென்ற எண்ணம் பலர் மனத்திலும் எழுந்தது.

அந்த எண்ணம் ஒருவகையாக நிறைவேறும் நாள் வந்தது. "தொனி விளக்கு" என அதன் தமிழ்மொழிபெயர்ப்பு ஒன்று வெளியாகி உளது. மொழிபெயர்ப்பதென்றால், இருமொழிப் புலமையோடு, சாஸ்திர மரியாதை அல்லது நூன்மரபினை உணர்தலும் வேண்டும். இதனை இயற்றியவர் அண்ணாமலைப் பல்கலைக்கழக வடமொழிப் பேராசிரியர் திரு. பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் ஆவர். இவர் தமிழிலும் தமக்குப் பேராராய்ச்சி உண்டெனத் தம்மைப் பண்டைத் தமிழுரையாசிரியர்களோடு ஒருங்குவைத்து எண்ணுபவர். ஆதலின் இந்த மொழிபெயர்ப்பினை அனைவரும் வரவேற்பர். இந்த நூலின் இன்றியமையாமையைக் கருதி இந்த மொழிபெயர்ப்பை ஆராய்ந்து, குற்றங்கள் இருப்பின் அவற்றை விளக்கிக்காட்டி உண்மையை உணர்த்துவது, சிறந்த தமிழ்த்தொண்டெனத் தோன்றியது.

"த்வந்யாலோகம்" என்ற நூலை நூற்பா (மூலகாரிகை) ஆகவும், கருத்துரையாகவும் (விருத்தி), ஆசிரியர் ஆநந்தவர்த்தனர் இயற்றி அமைத்துள்ளார். தமிழிலே சிவஞானபோதம் இயற்றியருளிய மெய்கண்டார் இவ்வாறு நூற்பாவும், கருத்துரையுமாகத் தம் நூலை இயற்றியிருப்பது இங்கு நினைவிற்கு வரும். இந்த நூலின் நான்கு இயல்களையும் விளக்கிலிருந்து வரும் கதிர்களாக ஆசிரியர் பேசுகின்றார். உரைமுகப்பிலே கடவுள்வாழ்த்து ஒன்று இடையூறெல்லாம் தீரப்பாடியுள்ளார்.

> தன் விருப்பின் மதுப்பகைஞன் மடங்கலென வருங்காலை
> தூய்மைகொடும் வடிவுகொடும் பிறையதனைத்துயரூட்டும்
> புகலடைந்தார் இடர்பிளக்கும் மன்னுகிர்கள் உமைக்காக்க.

என்ற கருத்துப்பட அச்செய்யுள் அமைந்துள்ளது. அபிநவகுப்தரும் இதற்கே முதலில் உரை எழுதுகிறார். நூலின் உட்பொருளினை வாழ்த்துப்பா சுட்டுதல் வேண்டும் என்ற மரபினை யொட்டி உரையாசிரியர், பொருள், அணி, சுவை என மூவகை இறைச்சியாம் தொனியும் இங்குள்ளதனைத் தமது குரு உரைத்த தாக விரித்தெழுதுகின்றார். நூலின் இன்றியமையா உயிர்நிலையாக இதனை முன்னோர் கருதிவந்தனரென்பது பின்னைய உரைகளைக் காணும்பொழுதும் தெளிவாகிறது.

(1)

இந்த வாழ்த்துப்பாவினைத் திரு. பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் அறவே விட்டுவிட்டுத் தமது மொழிபெயர்ப்பைத் தொடங்குகின்றார். இது திருமாலின் வாழ்த்தை முதலில் வைக்க விரும்பாத இவருடைய மனப் பான்மையைக் காண்பிக்கின்றது என்று பலர்பேச இடம் கொடுத்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். நூலை மொழிபெயர்க்கப் புகுவாருக்குப் பொதுமைநோக்கம் வேண்டும். தம்முடைய கடவுள் வாழ்த்தில் அறுமா முகனுக்கும், ஆநந்தவர்த்தனருக்கு மிடையில் அடல்நரஹரியைக் குறித் திருப்பதே அச்செய்யுளை மொழிபெயர்த்ததாகுமா? அல்லது அச்செய்யுளின் கருத்தைத்தான் பூர்ணமாக வெளியிட்டதாகுமா? இடையூறுதீரஎன்றே ஆநந்தவர்த்தனர் எழுதிய வாழ்த்தை மொழிபெயர்த்திருந்தால் இந்த இடை யூற்றிற்கே இடமிராது.

(2)

(தொ. வி. பக். 1) 'அஃதில்லென்று சிலர் கூறுபவே[3]' என்று காரிகை யிட்டு அதன்கீழ்........

> 3: "'கூறுப' என்பதற்குக் கூறவுங் கூடும் என்பது பொருள். அஃது ஆநந்தவர்த்தனச்சாரியர் நேரில் பிறர்கூறக் கேளாது தாமே தம் மனப்பான்மையால் எழக்கூடிய தடைகளை எழுப்புகின்றமை யைத் தெரிவிக்கும். பின்னர் மற்றொருவர் கூறக்கூடும் என நினைத்து மறுத்தல் தகுமோவெனின், அவரது மனத்துள் அவை முன்னரே தோன்றியமையான் மறுத்தல் தக்கதே யென்க"

என்று குறிப்பு எழுதப்பட்டிருக்கின்றது.

கூறுப என்பதற்குக் கூறுவார்கள் என்று அறுதியிட்டுச் சொல்வது பொருளே யன்றி கூறவும் கூடும் எனப் பொருள் கூறுவது எந்தத் தமிழ் நூலாருக்கும் வழக்கமன்று.

மேலும் தம் மனப்பான்மையால் எழக்கூடிய ஆக்ஷேபங்களை ஆநந்தவர்த்தனர் தாமே எழுப்புகின்றார் என்று சொல்லி, அதன் மேல் அப்படியாயின் மற்றொருவர் கூறக்கூடும் என்றது எப்படிப் பொருந்தும் என்ற ஆக்ஷேபத்தைக் காட்டி, அதற்குச் சமாதானம் 'அவரது மனத்துள் அவை (தடைகள்—ஆக்ஷேபங்கள்) முன்னரே தோன்றியமையான் மறுத்தல் தக்கதே என்று சொல்லப்படுகின்றது. தாமே ஆக்ஷேபங்களை எழுப்பியிருக்க

மற்றொருவர் கூறக்கூடும் என்பது எப்படி என்ற ஆக்ஷேபத்திற்கு, முன்னரே இவர் மனதில் தோன்றின என்பது எப்படிச் சமாதானமாகும்? கேள்விக்கும் சமாதானத்திற்கும் சம்பந்தமேதாவது இருக்கிறதா? இவை இவர் மனதில் முன்னர்த் தோன்றினவென்ன? பின்னர்த் தோன்றினவென்ன? ஆக்ஷேபங்கள் இவருடையனவே யாதலின் மற்றொருவர் கூறக்கூடும் என்பது சேராது என்ற கேள்வி அப்படியேயன்றோ நிற்கின்றது. மூலம், உரை இவைகளின் கருத்துக் களை உள்ளபடி மொழிபெயர்ப்பாளர் உணராமையால் இப் பெருங் குழப்பம் இங்கு ஏற்பட்டிருக்கின்றது.

மூலத்தில் 'ஜகது:' என்று 'லிட்' எனப்படும் இறந்தகால வினைமுற்று இருக்கின்றது. இவ் வினைமுற்று இறந்தகாலத்தோடு பரோக்ஷத்வம் என்கிற நேரில் கேட்டறியப்படாத் தன்மையையும் காட்டுகின்றது. பிறர் சொல்லக் கேட்டறியாத நூலாசிரியர் எப்படி அவர்கள் கூறுவதாக ஒருபக்ஷத்தைச் சொல்லித் தூஷிப்பது என்று ஐயமெழ, அதற்கு உரையாசியர் 'ஆம் உண்மை யில் பிறர் சொல்லக் கேட்டதில்லைதான். ஆனாலும் தாமே பிறர் சொன்னதாகக் கற்பித்து ஆக்ஷேபங்களைக்காட்டித் தூஷிக்கின்றார்' என்று சமாதானங் கூறி யுள்ளார். பரோக்ஷத்வம் என்ற அர்த்தம் மூலத்தில் जगदुः என்றவிடத்தில் 'லிட்' டால் தோன்றுவதால், அதைப் பொருந்தவைக்க உரையாசிரியர் இப்படிச் சொல்லவேண்டியது அவசியமாயிற்று. இங்கு மொழிபெயர்ப்பில் 'சில்லோர் கூறுப' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க அங்கு உரைகாரர் சொன்னதை இவர் இங்கு சொல்லவேண்டிய அவசியம் சிறிதளவுமில்லை. அப்படியே சொல்வதானாலும்,

"இஃது ஆநந்தவர்த்தனச்சாரியர் நேரில் பிறர் கூறக் கேளாது தாமே தம் மனப்பான்மையால் எழக்கூடிய ஆக்ஷேபங்களைப் பிறர் கூறியனவாக வைத்து எழுப்புகின்றமையைத் தெரிவிக்கும்" என்று இப்படியன்றோ சொல்லியிருத்தல் வேண்டும்.

ஆகவே பின்னர் மற்றொருவர் கூறக்கூடும் என நினைத்து மறுத்தல் தகுமோ என்ற ஐயத்திற்கு இடமேயில்லை. ஆயினும் மற்றோர் ஐயம் இங்கு எழக்கூடும். சிலர் கூறக்கூடும் என்று நூலாசிரியர் தாமே கற்பித்துச் சொல்வதாயின் 'ஜகது:' அதாவது சொன்னார்கள் என்ற இறந்தகாலம் சேர்வது எங்ஙனம்? என்று. இதற்குப் பரிஹாரம் சொல்லப்புகுந்த உரையா சிரியர் இதற்கு முன்பே நூலாசிரியர் புத்தியில் இவ்வாறு சிலர் சொல்லலாம் என்று தோன்றிவிட்டபடியால், தோற்றத்தின் இறந்தகாலத்தை வைத்தே தோன்றினதற்கும் இக்காலத்தைச் சொல்வது பொருத்தமற்றதன்றென்று ஒரு வகையாகப் பதில் கூறினர்.

இவ்விஷயத்தை மொழிபெயர்ப்பாளர் கூறவேண்டியதற்குச் சிறிதளவும் அவசியமில்லை. கூறியிருத்தலும் எவ்விதத்திலும் பொருத்தமில்லாமலிருக்கிறது.

(3)

தொ. வி. முதல் பக்கத்திலேயே

"'பாக்தம்' என்பதற்கு மூவகையாகப்பொருள்கூறினர்"

என்று குறிப்பொன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மூவகைப்பொருள் கூறினவர் உரையாசிரியரான அபிநவகுப்தர் என்று இவர் கருதியிருக்கவேண்டும். உண்மையில் அபிநவகுப்தர் கூறியிருப்பது நான்கு வகைப்பொருள். இதை மொழிபெயர்ப்பாளர் உற்றுநோக்காதது மிகவும் விசனிக்கத்தக்கது. இந் நான்குவகைப்பொருளும் 'பாக்தம்' என்ற சொல்லின் பகுதியான 'பக்தி' என்ற சொல்லுக்கே கூறப்பட்டுள்ளது. இவற்றுள் முதல் வகையைக் கூறுமிடத்து 'भज्यते सेव्यते पदार्थेन प्रसिद्धतया उत्प्रेक्ष्यते इति भक्तिः धर्मः अभिधेयेन सामीप्यादिः' என்றுர் உரையாசிரியர். भक्तिः பஜிக்கப்படுவது—பிரசித்தமாகையால் உடனே தோற்றுவிக்கப்படுவது; எதனுல் பஜிக்கப்படுவது என்றுல் पदार्थेन சொல்லின் பொருளால் எனப்பட்டது. இப்படி உரையாசிரியர் ஸ்பஷ்டமாய்க் கூறுநிற்க, சாத்திரியார்,

> "அறிஞர்களாற் சிறப்பாகக் கொண்டாடப்படும் (பஜிக்கப்படும்) குணங்கள் பக்தி எனப்படும்; அக்குணம் பற்றிவருவது பாக்தம் என்பது ஒருவகை."

என்று எழுதுகிறுர்.

பதார்த்தத்தினுல் பஜிக்கப்படும் - தோற்றுவிக்கப்படும் என்று உரையிலிருக்க, 'அறிஞர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும்' என்ற பொருளை இவர் எங்ஙனம் கண்டுபிடித்தனரோ! இது நிற்க, 'பாக்தம்' என்ற சொல்லின் பகுதியான 'பக்தி' என்ற சொல்லுக்கு இப்படிப் பலவிதமாகப் பொருள்கூறி, அதிலிருந்து வந்தது என்ற பொருளில் விகுதி வந்ததாகக் கருதி 'பாக்தம்' என்ற சொல்லை அமைத்து, அதிலிருந்து வந்த பொருள் எது என்பதை

> तत आगतो भाक्तः लाक्षणिकोऽर्थः
> तत आगतो गौणोऽर्थो भाक्तः
> तत आगतो भाक्त इति गौणो लाक्षणिकश्च ॥

என்றிப்படி அபிநவகுப்தர் விளக்கிக் காட்டியுள்ளார். இவ்விதம் லக்ஷணையினுலும், கௌணியினுலும் பெறப்படும் பொருள் 'பாக்தம்' எனக் கூறுநிற்க, மொழிபெயர்ப்பாளர் 2வது பக்கம் கீழ்க்குறிப்பில்,

'பாக்தம் என்பதும் இலக்கணை என்பதும் ஒருபொருட்கிளவியாகும்' என்கிருர். இது 'சோறு' என்பதும், 'சமைத்தல்' என்பதும் ஒருபொருட் கிளவி என்று கூறுவதுபோலாகும்.

'த்வந்யாலோகத்தை எனக்குக் கற்பித்தவர் மஹாமஹோபாத்யாய, வித்யாவாசஸ்பதி, தர்சநகலாநிதி, குலபதி குப்புஸ்வாமி சாஸ்திரியார் ஆவர். அவர் கற்பித்ததோடு நில்லாது இத் தொனிவிளக்கில் முக்காற்பகுதியை எழுத்தெழுத்தாய் ஆய்ந்தும், பலவிடங்களில் திருத்தியும் உதவிபுரிந் தனர்' என்று முகவுரையில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு அப்பெரியார் உதவிபுரிந்திருப்பின் இம்மொழிபெயர்ப்பின் அமைப்பே வேறுபட்டிருக்கு மென்பது திண்ணம்.

(4)

सहस्रशो हि महात्मभिरन्यैः अलङ्कारप्रकाराः प्रकाशिताः प्रकाश्यन्ते च । न च तेषामेषा दशा श्रूयते ॥

என்று பூர்வபக்ஷத்தில் ஆனந்தவர்த்தனர் கூறுகின்ருர். இதற்குத் தொனி விளக்கு 4-ஆம் பக்கத்தில்

> 'ஆயிரக்கணக்கான வேறு பெரும் புலவர்களால் அணிவகைகள் உணர்த்தவும்பட்டன. இனி உணர்த்தவும்படும். அவற்றிற்கு இந் நிலையைக் காணேம்.'

என்று மொழிபெயர்ப்புக் காணப்படுகின்றது. **सहस्रशः** என்ற சொல் லுக்கு 'ஆயிரக்கணக்கான' என்று அர்த்தமில்லை. 'ஆயிரக்கணக்காக' என்பதே அர்த்தம். '**सङ्ख्यैकवचनाच्च वीप्सायाम्**' என்ற வ்யாகரண ஸூத்ரார்த்தமறிந் தவர்கள் இதை நன்குணர்வர். ஆகவே வினையில் அந்வயிக்கும் இப்பதத்தைப் பெயர்ச்சொல்லொடு அந்வயிப்பதாகக் கருதி ஆயிரக்கணக்கான பெரும்புலவர் என்று மொழிபெயர்த்திருப்பது விந்தையே. 'மஹாத்மாக்களான மற்ருேர் பலரால் அணிவகைகள் ஆயிரக்கணக்காகவன்ருே விளக்கப்பட்டிருக்கின்றன' என்றிங்கே பொருள் கூறவேண்டும்.

प्रकाश्यन्ते என்று நிகழ்காலமிருக்க, 'இனி உணர்த்தவும் படும்' என்று பொருள் கூறியிருப்பது மிகத்தவறு. 'உணர்த்தவும்படுகின்றன' என்றிருக்க வேண்டும். இவற்றிற்குமேல் பெருந்தவறு ஒன்று காணப்படுகின்றது. 'न च तेषामेषा दशा' என்றவிடத்தில் तेषां என்ற ஸர்வநாமசப்தம் எதைக் குறிக்கின் றது என்பதை மொழிபெயர்த்தவர் உள்ளபடி உணர்ந்தாரில்லை. 'அவற் றிற்கு இந்நிலையைக் காணேம்' என்கிருர். 'இந்நிலை' என்றது எந்நிலை என் பதை இவர் ஆலோசிக்கவில்லை. பதங்களுக்கு வரிசையாய் அர்த்தங் கூறினர். அதோடு மொழிபெயர்ப்பவரின் பணி முடிந்துவிட்டது எனக் கருதி நின்றுவிட்டார். ரஸிகர்கள் இங்கே ஊன்றிப் பார்க்கவேண்டும்,

'एषा दर्शोति—स्वयं दर्पः परैश्च स्तूयमानतेत्यर्थः' என்று உரை ஸ்பஷ்டமாயிருக்கின்றதே. தான் இறுமாப்புக்கொண்டிருப்பதும், பிறரால் புகழப்படுவதுமாகிய இது இங்கே 'இந்நிலே' என்ற பதத்தால் குறிக்கப்படுகின்றது என்று விளக்கிக் காட்டுகிருர் உரையாசிரியர். இதிலிருந்து तेषां என்ற சுட்டு மனிதரைக் குறிப் பிடுகிறதேயன்றி அணிகளைக் குறிக்கவில்லே என்பது தெளிவாய்த் தோன்ற வில்லையா? 'அவர்களுக்கு இந்நிலேயைக் காணேம்' என்றன்ருே மொழி பெயர்ப்பு இருக்கவேண்டும். ஆயிரக்கணக்காக அலங்காரங்களே மற்றப் பெரியோர்கள் வெளியிட்டிருக்கின்றனர். வெளியிட்டும் வருகின்றனர். அவர் களுக்கு இப்படிக் கர்வமும், பிறரைக்கொண்டு புகழப்பெறுவதும் காணேமே. த்வனி என்ற மிகச்சிறியதான விஷயத்தைப்பற்றி நின்று, அபூர்வமான மிகப் பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்துவிட்டதாய்க் கருதித் தலேகால் தெரியாமல் ஆடுகின்றனரே இவர்கள்' என்று இங்கு கூறப்படுகின்றது. இதனுல் மூலத் திலுள்ள 'महात्मभिः' என்ற பதத்தைப் பெரும் புலவர்களால் என்று மொழி பெயர்த்ததும் தவறென்பது தெளிவாகும். கர்வமும், பிறர் தம்மைப் புகழ்வ தில் விருப்பமுமில்லாத கம்பீரமனேநிலே யுடையோரைக் கருதி 'महात्म' பதம் இங்கு ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது; புலமையைக் கருதியன்று. இவ்விதம் பாஷையின் நிலேயைக் கவனியாது மொழிபெயர்ப்பது இரு மொழிகளின் வரம்பையும் சிதைப்பதாகும்.

(5)

'व्युत्पन्न' என்ற பதம் இப்பொழுது சாதாரணமாக व्युत्पात्ति அதாவது சொற்பொருளறிவு பெற்றவர்களேக் குறிக்கும். ஆனல் இப்பதம் சொல்லணி இலக்கணவிதிகளேக் கொண்டமைக்கப்பட்ட சிறப்புடைமை கருதிச் சொற்கள் விஷயமாயும் முன்னேர்களால் வழங்கப்பட்டிருக்கின்றது.

व्युत्पन्नै रचितं च नैव वचनैः என்ற மூலத்தில் பிற்கூறிய பொருளிலேயே व्युत्पन्न பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. 'சொல்லணி பூர்த்தியாலுண்டான சிறப்புடைய சொற்ருெடரால் அமைக்கப்பெருததும்' என்று மேல் எடுக்கப் பட்ட மூலத்திற்குப் பொருள் கூறவேண்டும். சாத்திரியாரோ தொ. வி. 4-ஆம் பக்கத்தில் 'அறிஞர் வழங்கும் சொற்ருெடரையும்' என மொழி பெயர்த்திருக்கிருர். 'व्युत्पन्नैः' என்பது 'वचनैः' என்பதற்கு அடைமொழி யாகும். 'அறிஞர் வழங்கும்' என்ற பொருள் தோன்றும்படியான சொல் இங்கு ஒன்றுமில்லே. **व्युत्पन्नै रचितं च नैव वचनैः इति शब्दालङ्काराणां (अभाव उक्तः)** என்கிற உரையில் இஃதனேத்தும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கவனியாது சாத்திரியார் மொழிபெயர்த்திருக்கிருர்.

(6)

தொ. வி. 5-ஆம் பக்கத்தில்,

"மற்ருெருசாரார் அதனேப் 'பாக்தம்' என்கின்றனர்"

என்று மொழிபெயர்க்கப்பட்டுளது.

இதற்கு மூலம் 'भाक्तमाहुस्तमन्ये' என்பதாம். ஆனால் இது விருத்திகாரர் இங்கு தாமாகச் சொன்ன சொற்றொடரன்று. முன் கூறப்பட்ட பெரிய காரிகையின் இரண்டாவது பாதத்தின் கடைசியிலுள்ள பகுதியாகும். அப் பகுதியே இவ்விடத்தில் விளக்குவதற்காக எடுக்கப்பட்டிருக்கிறது. இதை நினைப்பில் வைத்து மொழிபெயர்த்திருந்தால் 'பாக்தமேயஃதெனப் பகர்வர் சில்லோர்' என்று முதற்காரிகையின் மொழிபெயர்ப்பிலுள்ளதை அப்படியே எடுத்துக் கூறியிருப்பர். அதுவே சரியான மொழிபெயர்ப்பாகும். ஆகவே முன்பின் சொன்னதொன்றையும் மனதில் கொள்ளாமல், பிரகரணங்களையும் நூலாசிரியரின் கருத்தையும் கவனியாது இம் மொழிபெயர்ப்பு அமைந் திருக்கின்றது.

(7)

தொ. வி. 5-ஆம் பக்கத்திலேயே,

> "अन्ये तं ध्वनिसंज्ञितं काव्यात्मानं गुणवृत्तिरित्याहुः என்ற மூலம் 'த்வனி' என்ற பெயரைக்கொண்ட காவியத்தைக் குணவிருத்தி என்கின்றனர்."

என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

काव्यस्यात्मा ध्वनिरिति என்று முதற்காரிகையின் முதல்பாதத்தில் கூறியுள்ளதை இரண்டாம்பாதக் கடைசியிலுள்ள तं என்ற சுட்டு, குறிக்கின்றது. இதை இவ்விடத்தில் 'ध्वनिसंज्ञितं काव्यात्मानं' என்ற விதனால் விளக்கிக்காட்டியிருக் கின்றார். இதை நோக்காது மொழிபெயர்ப்பாளர் 'த்வனி என்ற பெயரைக் கொண்ட காவியத்தைக் குணவிருத்தி என்கின்றனர்.' எனக் கூறுகின்றார். 'த்வனி என்ற பெயருள்ள காவ்யாத்மாவைக் குணவிருத்தி என்கின்றனர்.' எனக் கூறியிருத்தல் வேண்டும். த்வனி என்ற பெயருள்ளதாகக் கூறப் பட்டிருப்பது காவ்யத்தின் ஆத்மாவே யன்றிக் காவியமல்ல.

(8)

இதற்குமேல் அதே 5-ஆம் பக்கத்தில்,

> "தொனியின் வழி சிறிது அவர்களால் அணுகப்படுகின்றது என்றாலும், அத்தொனியை இலக்கணங்கூறி அவர் விளக்காமையால் அவர் தொனியைக் குணவிருத்தியாகக் கருதினர் எனக்கொண்டு மற்றொரு சாரார் அதனைப் பாக்தம் என்கின்றனர்"

என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

'மற்றொரு சாரார் என்பது உத்படர் முதலியோரைக் குறிக்கும்' என்று குறிப்பு எழுதியிருக்கும் மொழிபெயர்ப்பாளர் இவ்விடத்தில் உத்படர் முதலியோரைப் பூர்வபக்ஷிகளாகக் கருதியிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது. த்வனி என்று ஒன்று இல்லை என்று கருதும் பூர்வபக்ஷிகளின் பக்ஷத்தை நிரூபிக்கும் ஸந்தர்ப்பத்தில் 'தொனியின் வழி சிறிது அவர்களால் அணுகப்படுகின்றது' என்பது பொருந்தாது. அவ்வழியைச் சிறிது காண்பித்தாலும் அவர்கள் த்வனியை அங்கீகரித்தவர்களாகவே ஆகின்றனர். மூலக்ரந்தத்திற்கு இப்படிப் பொருள் கூறுவது கூடாதென உரையாசிரியரும் விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

दर्शयतेति । भट्टोद्भटवामनादिना । . . . . . . । मनाक् स्पृष्ट इति । तैस्तावत् ध्वनिदिगुन्मीलिता । यथालिखितपाठकैस्तु स्वरूपविवेकं कर्तुमशक्नुवद्भिः तत्स्वरूपविवेकोद्यतः प्रत्युतोपालभ्यते अभग्ननारिकेलकल्पयथाश्रुतग्रन्थोद्ग्रहणमात्रेणेति भावः ॥

என்ற இவ்வுரையில் உத்படர் வாமனர் முதலியோரால் சிறிது காண்பிக்கப்பட்டிருக்கும் த்வனியை உள்ளபடி யறியமாட்டாது, அறிந்து நிரூபிக்கப் புகும் புலவர்களை விபரீதமாகத் திட்டும் அறிவிலிகள் இங்கே பூர்வபக்ஷிகள் என்று காட்டப்பட்டிருக்கிறது.

'...........दर्शयता ध्वनिमार्गः मनाक् स्पृष्टोऽपि न लक्षितः' என்ற மூலத்திற்கு 'குணவிருத்தியாலே காவியங்களில் சொற்பொருள் உபயோகமுள்ளதெனக் காட்டிய உத்படர் முதலியோரால் த்வனியின் வழி சிறிது தொடப்பட்டிருந்தும் உடைக்காத முழுத்தேங்காயை அப்படியே எடுத்து வைப்பதுபோல் அவர்களின் கருத்தை உணராது அவர்கள் எழுதியிருப்பதை அப்படியே படிக்கும் பின்னோர் சிலரால் அது உணரப்படவில்லை' என்ற கருத்தே நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. तत्स्वरूपविवेको न कृतः என்ற பாடத்திலும் உத்படர் முதலியோரைப் பூர்வபக்ஷிகளாகக் கருத இடமில்லை.

(9)

தொ. வி. 6-ஆம் பக்கத்தில்,

> "இவ்வாறு தொனியைப்பற்றி வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதனால், அதன் தன்மையைச் சுவையறிந்தோர் மகிழக் கூறுவோம்.
>
> சிறந்த கவிகள் யாவரும் இயற்றிய காவியங்களெல்லாவற்றிலும் ஸாரமாய் நிற்பதும், மிக்க அழகு பொருந்தியதும், பழைய சிறந்த இலக்கணக் கர்த்தர்களால் நுண்ணிய அறிவுகொண்டு விளக்கப் படாததுமாகவுள்ளது அதன் தன்மை.

இனி இராமாயணம் மாபாரதம் முதலிய இலக்கியங்களில் எங்கும் பிரசித்தமாக வழங்கப்பெற்றதாகி, இலக்கணமூலமாகக் காண்கின்ற சுவையுணர்ந்தோரின் மனத்தில் ஆனந்தம் நிலைபெற்றிருக்கவேண்டு மென்று அத்தொனியின் தன்மை விளக்கப்படுகின்றது."

என மொழிபெயர்ப்புக் காணப்படுகின்றது.

இது அவ்விடத்தில் ஒரே பாராவாக இருப்பினும் நமது நிரூபணத்திற் கேற்றவாறு மூன்றாகப் பிரித்து எழுதியிருக்கின்றோம்.

இம் மொழிபெயர்ப்பின் சீர்கேட்டை அறிஞர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இங்கு மூலம் அடியில் வருமாறு:—

तेन एवंविधासु विमतिषु स्थितासु सहृदयमनःप्रीतये तत्स्वरूपं ब्रूमः । तस्य हि ध्वनेः स्वरूपं सकलसत्कविकाव्योपनिषद्भूतं अतिरमणीयं अणीयसीभिश्चिरन्तन-काव्यलक्षणविधायिनां बुद्धिभिरनुन्मीलितपूर्वमथ च रामायणमहाभारतप्रभृतिनि लक्ष्ये सर्वत्र प्रसिद्धव्यवहारं लक्षयतां सहृदयानामानन्दो मनसि लभतां प्रतिष्ठामिति प्रकाश्यते ॥

இதில் முதல் வாக்கியத்தில், ஏழாம் வேற்றுமையுடைய மூன்று பதங்கள் தவிர மற்றவை எல்லாம் முதல் காரிகையின் கடைசிப் பாதத்திலுள்ளவைகளே என்பது நோக்கத்தக்கது. அங்கு நாலாம்பாதத்தில் இரண்டாவதாக நின்ற **ब्रूमः** என்ற பதம் இங்கு முடிவில் இருக்கின்றது என்ற இவ்வளவே பேதம். முதல் மூன்று பாதங்களையும் விவரித்த பிறகு நான்காவது பாதத்தையும் விவரிக்கவேண்டிய ஸந்தர்ப்பம் நேர அச் சொற்களை அப்படியே எடுக்கிறார். இப்படி வரிசையாக காரிகாபதங்கள் விளக்கப்படப் போகின்றன வென்பதை அறிந்திலராதலின் மொழிபெயர்ப்பாளர் காரிகையின் நான்காவது பாதத்தி லுள்ள **ब्रूमः** என்ற தன்மைவினையைக் கவனியாது,

> அதனால் விளக்கின ரதனை யுணர்வோர்
> மகிழப் புலவரா நந்தவர்த் தனரே. (தொ. வி. பக். 2)

என்று படர்க்கையைப் புகுத்தினர். நிகழ்காலம்போய் இறந்தகாலமும் வந்து சேர்ந்தது. முதல் வாக்கியத்தின் கருத்தை விளக்கிக் காட்டவே அதற்கடுத்த வாக்கியம் கூறப்படுகிறதென்ற உண்மை யுணராது சாத்திரியார் மொழி பெயர்த்திருக்கிறார். **तत्स्वरूपं** என்பது **तस्य स्वरूपं** என விரியும். **तस्य हि ध्वनेः स्वरूपम्** என்று மூலகாரர் ஸ்பஷ்டமாக இதைக் காண்பித்துள்ளார். நிற்க **तस्य हि ध्वनेः स्वरूपं** என்று தொடங்கும் வாக்யம் எங்கு முடிகின்றது? **स्वरूपम्** என்ற பதத்திலுள்ள வேற்றுமை யாது?

பம்பாய் நிர்ணயஸாகர அச்சுக்கூடப் பதிப்பில் மூன்ருவது அடைமொழியாகிய **अनुन्मीलितपूर्वम्** என்றவிதற்குப்பிறகு முற்றுப்புள்ளி போடப்பட்டிருக்கிறது. அதைக்கண்டு சாத்திரியார், இந்த வாக்யம் அதோடு முடிந்துவிட்டதாகப் பிரமித்து **स्वरूपम्** என்பதை முதல் வேற்றுமையுடையதாகக் கருதி மொழிபெயர்த்திருக்கிருர். மொழிபெயர்ப்பில் 'சிறந்த கவிகள்' என்றும் 'இனி இராமாயணம்' என்றும் தொடங்கும் வாக்யங்களிரண்டும் ஒரே வாக்யமாயிருக்கவேண்டும். பண்டிதராஜ ஸ்ரீராமபிஷாரொடி இயற்றிய உரையுடன் காசியில் பதிப்பிக்கப்பட்ட புஸ்தகத்தில் சரியான பாடம் இவ்விடத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. நிர்ணயஸாகரப் பதிப்பில் **अनुन्मीलितपूर्वम्** என்பதற்குப்பிறகு முற்றுப்புள்ளி அடையாளமாய் கோடு போடப்பட்டிருப்பது தவறு.

இங்கு அந்வயத்தில் சிலர் தவறக்கூடும் என்று நினைத்தே உரையாசிரியரான அபிநவகுப்தர்,

ध्वनेः स्वरूपं लक्षयतां सम्बन्धिनि मनसि आनन्दः . . . . प्रतिष्ठां लभतामिति प्रयोजनं सम्पादयितुं तत्स्वरूपं प्रकाश्यत इति सङ्गतिः ॥

என்ற அந்வயத்தை விசதமாக எடுத்துக் காட்டியுள்ளார். இங்கு **सङ्गतिः** என்று அந்வயமே விளக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் மொழிபெயர்ப்பாளர் விஷயத்தில் பயன்படாதொழிந்தது. பிறகு 'இனி இராமாயணம்' என்று ஆரம்பிக்கும் வாக்யத்தைச் சிறிது ஆராய்வோம். 'இனி இராமாயணம் மாபாரதம் முதலிய இலக்கியங்களில் எங்கும் ப்ரசித்தமாக வழங்கப்பெற்றதாகி' என்றதற்கு எங்கே அந்வயம்? **लक्षयतां सहृदयानाम्** என்ற மூலத்துக்கேற்ப 'இலக்கணமூலமாகக் காண்கின்ற' என்ற அடைமொழி சுவையுணர்ந்தோர்க்கேயல்லாது சுவைக்கல்லவென்பது காணத்தக்கது. **सहृदयानाम्** என்ற பதத்தை 'சுவையறிந்தோர்' என சாத்திரியார் மொழிபெயர்த்திருப்பினும் 'சுவை' என்ற பொருள் உணர்த்தும் சொல் மூலத்தில் இல்லையாகையால் இங்கு சுவையென்ற பொருள் கூறப்படுவதாகக்கொண்டு அதற்கு அடைமொழி யொன்றும் அமைக்கவியலாது. இங்கு இலக்கணமூலமாகக் காணப்படுவது எது என்ற கேள்வியும் எழுகின்றது? அதற்குப் பதில் இல்லை. இனி இவர் மொழிபெயர்ப்பின்படி

எங்கும் பிரசித்தமாக வழங்கப்பெற்றதாகி இலக்கணமூலமாகக் காணப்பெறுகின்ற சுவை யாது, அதை உணர்ந்தோரின் மனத்தில் என்று பொருள் கோடல் தகும், ஆனல் இது இவரது சொந்தப்பேச்சேயன்றி மொழிபெயர்ப்பாகாது. இதற்கும் மூலத்துக்கும் ஸம்பந்தமேயில்லை. இங்கு சரியான மொழிபெயர்ப்பு யாதெனில் கூறுவோம்.

'சிறந்த கவிகளியற்றிய காவியங்களெல்லாவற்றிலும் ஸாரமாய் நிற்பதென்றும், மிக்க வழகுபொருந்தியதென்றும், பழைய இலக்கணக்காரர்களுடைய அதிஸூக்ஷ்மபுத்திகளால் காண்பிக்கப்படாதாயினும் இராமாயணம்,

மாபாரதம் முதலிய இலக்கியங்களில் எங்கும் ப்ரசித்தமாக வழங்கப்படுவ தென்றும் அத்தொனியின் ஸ்வரூபத்தை நன்குணரும் ரஸிகர்களின் மனத்தில் ஆநந்தம் நிலைபெற்றிருக்கவேண்டுமென்று அதன் ஸ்வரூபம் விளக்கப் படுகின்றது.

(10)

तत्र ध्वनेरेव लक्षयितुमारब्धस्य भूमिकां रचयितुमिदमुच्यते என்ற அவதாரிகை யில் காணப்படும் **तत्र** என்ற முதல் பதத்தை எடுத்து அபிநவகுப்தர்,

तत्रेति। एवंविधे अभिधेये प्रयोजने च स्थित इत्यर्थः என்று பொருள் விளக்கிக் காண்பித்திருக்கின்றார்.

இங்கு தொ. வி. ஆறுவது பக்கத்தில்,

> "ஈண்டுக் கூறவேண்டிய பொருளும் அதன் பயனும் இவ்வாறிருத் தலால், தொனியின் இலக்கணம் கூறுவதற்குத் தோற்றுவாயாகப் பின்வரும் செய்யுள் கூறப்படுகின்றது"

என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

எதன் பயன்? யாது பயன்? என்பதைச் சாத்திரியார் கூற வேண்டும். தொனி இங்குக் கூறவேண்டிய பொருள். யாது பயன் அதற்கு முன்பு கூறப்பட்டுளது? முன்பு கூறியிருந்தாலன்றோ **तत्र** என்னும் சுட்டு அதைக் குறிக்கும். கீழே காட்டியிருக்கும் பயனெல்லாம் நூலிற்கேயாம். 'இவ்வாறிருத்தலால்' என்ற ஹேதுவுக்கு எங்கே அந்வயம்? கால்புள்ளியிட்டு 'இலக்கணம் கூறுவதற்கு' என்ற விடத்தில் அந்வயமில்லை யென்று காட்டப் பட்டிருக்கிறது. 'பின்வரும் செய்யுள் கூறப்படுவதற்கு' அது ஹேது வாகாமையால் அங்கும் அந்வயம் சொல்ல வழியில்லை. இங்கு முடிவில் ஹேதுவாகக் கொள்ளவேண்டுமென்பது உண்மை. ஆனால் அதற்கேற்றவாறு முதலில் தோன்றுமர்த்தத்தை விளக்கிக் காட்டவேண்டும். மூலத்திலுள்ள '**आरब्धस्य**' என்ற பதம் மொழிபெயர்ப்பில் விடப்பட்டிருக்கிறது. இங்கு நூலுக்கு விஷயம் இது வென்றும் பயன் இதுவென்றும் கூறியாயிற்று. அதன் பிறகு எடுத்துக்கொண்ட விஷயத்தை நிரூபிக்கவேண்டும். அதற்காக அதன் அடிப்படையாக இது சொல்லப்படுகிறதென்பது கருத்து. மொழிபெயர்த் தவர் உள்ளத்தில் இவ்வர்த்தம் தோன்றியிருக்குமா?

'இவ்விதமான விஷயமும் ப்ரயோஜனமுமிருக்க விளக்கிக்காட்டுவதற் காகத் தொடங்கப்பட்ட தொனிக்கே அஸ்திவாரம் கோலக் கருதி இது கூறப்படுகின்றது' என்று மொழிபெயர்த்திருக்கவேண்டும்.

(11)

தொ. வி. 6-ம் பக்கத்தில்,

अर्थस्सहृदयश्लाघ्यः काव्यात्मा यो व्यवस्थितः । என்ற காரிகை,

சுவைஞர் சுவைப்பதாற் காவியவான்மா
ஆகும் பொருள் தான் யாது

என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சுவைஞர் சுவைப்பதால் என்று ஹேதுவாகச் சொல்லும் சொல் மூலத்தில் இலது. ஹேதுவாதலும் விபரீதமாகவேயுளது. பொருள் காவ்யத்தின் ஆன்மாவாக இருத்தலால் அதை ரஸிகர் ரஸிக்கின்றனர். இஃதன்றி ரஸிகர் ரஸிப்பதால் பொருள் ஆன்மாவாகின்றதென்பதில்லை.

(12)

காரிகையில் **सहृदयश्लाघ्यः काव्यात्मा** என்றிருக்கும் அமைப்பை மாற்றி விருத்தியில்,

काव्यस्य हि ललितोचितसन्निवेशचारुणः शरीरस्येवात्मा साररूपतया स्थितः सहृदयश्लाघ्यः ॥ என்று விளக்கப்பட்டிருப்பதின் கருத்தை மொழிபெயர்ப்பாளர் ஆழ்ந்து நோக்கவில்லை. இந்த விருத்தியைச் சாத்திரியார்,

"எப்பொருள் குணம், அணி, சுவைத்தகுதி இவற்றால் அழகுபெற்று
உடலுக்கு உயிர்போல் சிறப்புற்றுச் சுவையறிஞர் கொண்டாடுமாறு
காவியவான்மா ஆகுமோ"

என மொழிபெயர்த்திருக்கிறார்.

இங்கு '**काव्यात्मा** என்று ஒரே பதமாகக் காரிகையில் இருந்தும் **काव्यस्य साररूपतया स्थितः** என்று பிரித்துக்காட்டியிருப்பதின் கருத்தை யுணராது 'காவியவான்மா வாகுமோ, எனக் கூறப்படுகிறது. சரீரஸ்தானத்திலுள்ள காவ்யத்துக்கு அடைமொழியாகச் சொல்லியிருப்பதைப் பொருளுக்கு அடைமொழியாகக் கொண்டு 'எப்பொருள் இவற்றால் அழகுபெற்று' என்று மொழிபெயர்க்கப்பட்டிருப்பது தவறு.

காரிகையின் மொழிபெயர்ப்பில் 'அறிஞர் சுவைப்பதால் காவியவான்மா ஆகும்' என்று முன்பு தாமே அங்கு ஹேதுவாகச் சொன்னதை விட்டு இங்கு, 'சுவையறிஞர் கொண்டாடுமாறு காவிய வான்மா வாகுமோ' என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இங்கு வடமொழியில் தக்க பயிற்சி பெற்றவர்கள் அடியில் வருமாறு மொழிபெயர்ப்பார்கள்:

'குணம், அணி இவற்ருலுண்டான சிறப்பையும் (சுவைத்) தகுதியையுமுடைய அமைப்பினுல் அழகுபெற்ற காவியத்திற்கு உடலுக்குயிர்போல் ஸாரமாய் நின்று ஸஹ்ருதயர்கள் கொண்டாடத் தகுந்ததான பொருள் ஒன்று உண்டல்லவா! என்று.

இங்கு 'ஜ்ஞ:' என்ற வடமொழிப் பதத்தை 'சுவை' என்ற தென்மொழியோடு கூட்டி சுவைஞர் என்ற பதத்தை ஸ்ருஷ்டிப்பதைவிட சுவையுணர்வோர் எனச் சொல்லியிருத்தல் தகுமெனத் தமிழ்ப்புலவர்கள் கருதுகின்றனர்.

(13)

प्रतीयमानं पुनरन्यदेव वस्त्वस्ति वाणीषु महाकवीनाम् ।
यत्तत्प्रसिद्धावयवातिरिक्तं विभाति लावण्यमिवाङ्गनासु ॥

மாபெரும் புலவர்கள் தவிர மற்றையோர்க்கு இங்குள்ள சொற்சுவையும் கருத்தும் புலப்படா. உரையாசிரியர் அவை எல்லாவற்றையும் விண்டே காட்டியிருக்கின்றனர். மொழிபெயர்ப்பாளர் விஷயத்தில் அவை சிறிதும் பயன்படவில்லை.

தொனி என்பதாய் ஒன்று இல்லை என்ற பக்ஷத்தை மறுக்கப்புகுந்த நூலாசிரியர் இங்கே முதலில் 'அது உண்டு' **अस्ति** என்கிருர். அதற்கு ப்ரமாணம் யாதெனில், 'அப்படித் தோன்றுகிறதன்ருே' **विभाति** என்று உத்தரார்த்தத்தில் விடையளிக்கிருர். பரீக்ஷித்துப் பார்த்தபொழுதும் ஒரு வஸ்து ஒரேவிதமாய்த் தோன்றினல் உண்மையிலே அவ்வஸ்து அவ்வாறு உளதென்று கொள்ள வேண்டும். வாச்யத்தைக்காட்டிலும் வேறுபட்டதாக மஹாகவிகளின் நூற்களில் வியங்கியம் தோன்றுகின்றது. ஆகையால் அது உளதே. இப்படி ஹேதுவையும் ஸாத்யத்தையும் வைத்து அவாந்தர வாக்கியங்களிரண்டு கொண்டு இக்காரிகை இயற்றப்பட்டிருக்கின்றது. இவ்வழகைக் கொஞ்சமும் கவனியாது,

'வியங்கியமென்னும் வேருேர் சீர்ப்பொருள்
விளங்குமாக்கவிஞர் விளம்புமவற்றில்
பெண்ணுடல் வேருமி லாவண்யம் போன்று.'—(தொ. வி பக். 7)

என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

உயர்பெரும் புலவர் உரைகளில் உளது
வியங்கியம் எனும்வே ருெம்பொருள் யாதது
அரிவைய ரிடத்தில் அழகினைப் போன்று
பிரசித்த வுறுப்பின் வேருய்த் தோன்றும்,

என்று இப்படி மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் நூலாசிரியரின் கருத்தைச் சற்றே காணலாம்.

(14)

காரிகையிலுள்ள பதங்களேயே உபயோகப்படுத்தி விருத்தியில் முதல் வாக்யம் எழுதப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு பதங்களுக்குப் பொருளும் கூறப் பட்டிருக்கிறது. அப்பதங்களில் 'प्रसिद्धावयवातिरिक्तम्' என்பதும் ஒன்று. प्रसिद्ध என்ற பதத்தின் அர்த்தம் அறவே மொழிபெயர்ப்பில் விடப்பட்டிருக் கிறது. अवयव என்பதை உடல் என்றுக்கிப் 'பெண்ணுடல்' என்கிருர் சாத்திரியார். இவ்வாறு காரிகையை மொழிபெயர்த்து, காரிகையின் விரிவே விருத்தி என்பதை மறந்து இதன் மொழிபெயர்ப்பை வேறுவிதமாய்ச் செய் கின்ருர். இங்கு प्रसिद्धावयवातिरिक्तम् என்ற பதத்தை प्रसिद्धेभ्यः अलङ्कृतेभ्यः प्रतीतेभ्यो वा अवयवेभ्यो व्यतिरिक्तत्वेन என விருத்திகாரர் விவரித்திருக்கிருர். வடமொழியில் நல்ல பரிசயமுள்ளவர்கள் இங்கு, விக்ரஹம் காட்டி प्रसिद्धेभ्यः என்ற சொல்லுக்கு अलङ्कृतेभ्यः प्रतीतेभ्यो वा என்று இரண்டு பொருள் உரைக்கப்பட்டிருக்கின்றன வென்பதை எளிதில் உணர்வார்கள். प्रसिद्धशब्दस्य सर्वप्रतीतत्वमलङ्कृतत्वं चार्थः என்று உரையாசிரியரும் வெளிப்படையாகக் காட்டியுள்ளார். இங்கு நம் விளக்கு விளக்கி யிருப்பதைச் சற்று ஆராய்வோம்.

> 'அணிகளினின்றும் ஏனைய காவியப்பகுதிகளினின்றும் வேறுபட்டு விளங்கும்.'

என்று தொ. வி. ஏழாம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. प्रसिद्धेभ्यः என்ற பதம் நோக்கப்படவே யில்லே. अलङ्कृतेभ्यः என்ற பதம் 'அணி களால் சிறப்புற்ற' எனப் பொருள் உணர்த்தும். இதற்கு अवयवेभ्यः என்ற தோடு அந்வயம். இதையறியாது अलङ्कृत பதத்திற்கு அணியென்றும், अवयवेभ्यः என்ற பதத்திற்கு ஏனைய காவ்யப்பகுதிகள் என்றும் பொருள் கொண்டு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

(15)

यत् तत् என்று காரிகையில் உள்ளதை எடுத்து விருத்தியில் सहृदयसुप्रसिद्धम् என்று அதன் கருத்து விளக்கப்பட்டிருக்கிறது. இஃது இக்காரிகையில் ப்ரதானமாய்க் கூறப்படும் வியங்கியப்பொருளுக்கு அடைமொழியென்பது மிக வெளிப்படை. இதில் ஐயமோ திரிபோ ஸாதாரணமாய் ஒருவருக்கும் உண்டாக நியாயமில்லே. ஆனுலும் விளக்குக்காரர் இங்கே விபரீதமாய் க்ர ஹித்து மொழிபெயர்த்திருக்கிருர்.

தொ. வி. ஏழாம் பக்கத்தில்,

> "அது மகளிருடலில் இலாவணியம்போன்று காவியத்தில் இரசிகரான் நன்கு அறியப்படும் அணிகளினின்றும் ஏனைய காவியப்பகுதிகளினின்றும் வேறுபட்டு விளங்கும்."

என்ற மொழிபெயர்ப்பில் **सहृदयसुप्रसिद्धम्** என்பது அணி முதலியவற்றுக்கு அடைமொழியாக்கப்பட்டிருக்கிறது. அணியைத் தனியே குறிக்கும் சொல்லே இங்கு இலதென முன்பே சொன்னோம். அதற்கு அடைமொழி வேறு கூறுவது மலடிமகனுக்கு ஆகாயத்தாமரைப்பூச் சூட்டுவதோடொக்கும்.

(16)

இதற்குமேல் அதே ஏழாம் பக்கத்தில்,

> "மகளிருடலினுள்ள இலாவணியம் எவ்வாறு உடற்பகுதிகள் எல்லாவற்றினின்றும் வேறுபட்டு இரசிகர் காணக்காண அவர் கண்ணைப் பறித்து மனத்தினைக்கவர்ந்து மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றதோ அவ்வாறே அவ் வியங்கியப்பொருளும் ஆம்."

என்று தாமாக ஏதோ ரஸாநுபவம் செய்கின்றார் விளக்குக்காரர்.

இங்கு நிர்ணயஸாகரப் பதிப்பிலும் காசி சௌகாம்பாப் பதிப்பிலும்,

यथा ह्यङ्गनासु लावण्यं पृथङ् निर्वर्ण्यमानं निखिलावयवव्यतिरेकि,

என்ற பாடம் உளது. **पृथङ् निर्वर्ण्यमानं** என்பதற்கு "வேறுபட்டதாகச் செவ்வனே காணப்பெறுகின்றதாய்' என்றிவ்வளவே பொருள். இது நிற்க, காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய வித்யாவாசஸ்பதி, குலபதி குப்புஸ்வாமி சாத்திரியாரவர்கள் கடாக்ஷம் பெற்று முறைப்படி அப்பெரியாரிடம் பாடம் கேட்டவர்கள் மேற்கூறிய பாடத்தைக்கொள்ள மறுப்பர். லோசநமென்ற உரையையும் அதன் உரையான கௌமுதியையும் அநுஸரித்து **पृथङ् निर्वर्ण्यमाननिखिलावयवव्यतिरेकि** என்று தான் பாடமிருக்கவேண்டுமென அப் பெரியார் கூறுவர். 'தனியே ஸ்பஷ்டமாய் காணப்படும் ஸர்வாவயவங்களைக் காட்டிலும் வேறான' என்பது இதன் பொருள்.

सहृदयलोचनामृतम् என்றவிடத்தில் 'ரஸிகர் காணக் காண' என்றிவ்வாறு ரஸாநுபவம் செய்வது யுக்தமே. ஆனாலும் **यथा लावण्य........ किमप्यन्यदेव ...... तत्त्वान्तरं तद्वदेव सोऽर्थः** என்ற விருத்தி 'எப்படி லாவண்யம் வேறுபட்ட உண்மைப்பொருளோ அப்படி அவ்வியங்கியப் பொருளும்' என்றிப்படிக் கூறுநிற்க, ப்ரகரணம் சொற்றொடர் ஒன்றையும் கவனியாது, 'எவ்வாறு ..... மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றதோ அவ்வாறே அவ்வியங்கியப் பொருளும் ஆம்' என்று மகிழ்ச்சியைத் தோற்றுவிப்

பது இங்கு ப்ரதானமாகப் பேசப்படுவதாய்க் கருதி மொழிபெயர்த்திருப்பது விந்தையே. இப்படி மொழிபெயர்த்திருப்பவர் 'த்வந்யாலோகம் படிக்கும் வடமொழி மாணவர் இதனை அந்நூலிற்குத் தமிழுரையாகக் கொள்ளவேண்டும்' என்று முகவுரையில் கூறுவது மிகப் பெரும் விந்தையாகும்.

(17)

இப்படி நான்காவது காரிகையில் வாச்யத்தைக் காட்டிலும் வேறுபட்டது வ்யங்கியம் என்று ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது. அது எப்படி என்பதை மேல்விரிவாக விருத்திகாரர் விளக்கிக் காட்டுகின்றார்.

இவ்விஷயத்தைச் சாஸ்திரக்கிரந்தம் எழுதும் முறையில் **सर्वेषु च तेषु प्रकारेषु तस्य वाच्यादन्यत्वम्। तथाहि—आद्यस्तावत्प्रभेदो वाच्याद्दूरं विभेदवान्** என்று விருத்திகாரர் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். இம்முறையை உள்ளபடி அறியாத சாத்திரியார் "அவ்வகையெல்லாவற்றுள்ளும் வியங்கியம் வாச்சியத்தினின்றும் வேறுபட்டது என்பது வெளிப்படை" என்று தொ. வி. 7-ம் பக்கத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். மூலத்தில் இராதிருந்தும் 'என்பது வெளிப்படை' என்பதைத் தாமாகச் சேர்த்திருக்கிறார். வெளிப்படையாகில் மேல் அவ்வளவு விரிவு எதற்காக? அவ்வளவு விரிவாக நிரூபிக்கப்புகும் நூலாசிரியர் முதலில் அது வெளிப்படை என்று கூறக்கருதியிருப்பரா? **तथाहि** என்பது எந்த ஸந்தர்ப்பத்தில் சாஸ்திரக்கிரந்தங்களில் ப்ரயோகிக்கப்படுகிறதென்பதை நன்கு உணர்ந்திருந்தால் இத்தவறு ஏற்பட்டிருக்க வழியில்லை.

(18)

தொ. வி. பதின்மூன்றும் பக்கக்குறிப்பில்,

> "அடித்துக் கொல்லப்பட்ட ஆண்பறவை ஆலம்பனவிபாவம்;
> பெண்பறவையின் கதறுகை உத்தீபன விபாவம்"

என விளக்கில் விளக்கப்பட்டிருக்கிறது.

லோகத்தில் காரணமாயிருப்பது காவியத்தில் விபாவமெனப்படுமென்றும் காரியமாயிருப்பது அநுபாவமெனப்படுமென்றும் ஸாஹித்யத்தில் அற்பபரிசயமுள்ளவருமறிவர். பெண்பறவையின் கதறுதல் சோகத்தின் காரியமாதலால் அநுபாவமேயன்றி உத்தீபநவிபாவமன்று. **आक्रन्दितशब्देनानुभावः** என்று உரையாசிரியர் இதை அநுபாவமென்று வாய்விட்டுச் சொல்லியுமிருக்கிறார்.

(19)

सरस्वती स्वादु तदर्थवस्तु என்ற ஆறும் காரிகையில் **तद् अर्थवस्तु** என்ற பதம் "அப்பொருளாகிய உண்மையை அதாவது அவ்வுண்மைப் பொருளை" என்ற அர்த்தத்தை உணர்த்துகின்றது. இது உரைகளில் ஸ்பஷ்டம்.

இங்கு தொ. வி. பதினான்காம் பக்கத்தில்,

"இனியவப்பொருளுடை வஸ்துவைச் சுரக்கும்" என்று இக்காரிகை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அப்பொருள் என்பது எது? அதையுடைய வஸ்து யாது? என்று சிறிதேனும் சிந்திக்கப்படவில்லை. இனிய என்ற பொருள் உணர்த்தும் பதம் மூலத்தில் இல்லை.

(20)

தொ. வி. பதினான்காம் பக்கத்திலேயே

येनास्मिन्नतिविचित्रकविपरंपरावाहिनि संसारे என்று தொடங்கும்விருத்தி

'ஆகலினன்றே பல்வகைச் சிறப்புடன் கூடிய'

என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

विचित्र பதத்துக்கு 'பல்வேறு வகைப்பட்ட' என்பது பொருள். பல்வகைச் சிறப்புடன் கூடிய என்ற அர்த்தம் எங்கிருந்து கிடைத்ததோ? 'அப்பிரதிபா விசேஷத்தாலேயே பல்வேறுவகைப்பட்ட' என்று மொழிபெயர்த்திருக்கவேண்டும்.

(21)

வெளிப்படையாகத் தோன்றும் பொருளும் அதை உணர்த்தும் சொல்லும் முறையே வாச்ய வாசகங்களெனப்படும். அப்படியே வ்யங்கியப்பொருளும் அதை உணர்த்தும் சொல்லும் முறையே வ்யங்க்ய வ்யஞ்ஜகங்களெனக் கூறப்படும். இவற்றுள் மஹாகவிகள் ஆதரிப்பது வ்யங்க்ய வ்யஞ்ஜகங்களையே என்று எட்டாவது காரிகையில் கூறப்படுகிறது. ஆகில் வாச்யவாசகங்களை முதலில் எடுப்பதேன்? முதலில் எடுக்கப்படுவதால் இவையே ப்ரதாநங்களாக வேண்டாவோ வென ஓர் ஐயமெழ, வ்யங்கிய வ்யஞ்ஜகங்களைத் தோற்றுவிக்க உபாயமாக வாச்யவாசகங்களை முதலில் எடுக்கின்றனர். ஆகையால் முதலில் எடுப்பதைக்கொண்டே இவை ப்ரதானமெனச் சொல்லவொண்ணாது. இதற்கு மாறாக இவை அப்ரதானமென்பதற்கே இது ஹேதுவாகுமென்று த்ருஷ்டாந்தத்துடன் ஒன்பதாவது காரிகையில் பரிஹாரம் கூறினர். பிறகு

अनेन प्रतिपादकस्य कवेर्व्यङ्ग्यमर्थं प्रति व्यापारो दर्शितः ।

என்று அக்காரிகையின் பொருளைச் சொல்லி முடித்து,

प्रतिपाद्यस्यापि तं दर्शयितुमाह—

என்று பத்தாவது காரிகைக்கு அவதாரிகை வைத்திருக்கின்றார்.

இங்கு தொ. வி. பதினைந்தாவது பக்கத்தில் அடியில் வருமாறு மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

"இதனால் கவிக்குச் சிறந்த நோக்கம் வியங்கியத்திலென உணர்த்தப்பட்டது காண்க. வ்யங்கியமே கவியின் நோக்கமாயினும் அதனை யுணர்த்தத் துணையாவது வாச்சியமெனப் பின்னரும் உணர்த்துகின்றார்' என்று.

மூலத்துக்கும் மொழிபெயர்ப்புக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா வென்று அறிஞர்கள் பார்க்கவேண்டும். அவதாரிகையின் கருத்து மொழி பெயர்ப்பாளருக்கு விளங்கவேயில்லை. இங்கு அவதாரிகையிலிருக்கும் **प्रति-पाद्यस्य** என்ற பதத்துக்கும் முதல் வாக்கியத்திலுள்ள **प्रतिपादकस्य** என்ற பதத்துக்கும் பொருள் யாதென்பதை ப்ராசீந சாஸ்திர நூல்களில் பரிசயமில்லாதார் அறியமுடியாது. இப்பொழுது, குறிக்கும் சொல்லை **प्रतिपादकम्** என்றும், குறிக்கப்படும் பொருளை **प्रतिपाद्यम्** என்றும் வழங்குகிறோம். ஆனால் பண்டைக் காலவழக்குப்படி உரைப்போன் ப்ரதிபாதகனும் கேட்போன் ப்ரதிபாத்யனுமாவர். இப்பொருளையே இங்கு மூலகாரர் கருதியிருக்கின்றனர். ஆகவே,

'இதனால் உரைப்போனாகிய கவிக்கு வ்யங்கியார்த்தத்தைப் பற்றியுள்ள வ்யாபாரம் கூறப்பட்டது. கேட்போனுக்கும் அதைப்பற்றியுள்ள வ்யாபாரத்தைத் தெரியப்படுத்தக் கூறுகின்றார்.' என்றே இங்கு மொழிபெயர்த்திருக்க வேண்டும்.

வ்யங்கியப்பொருள் ப்ரதானமாயினும் கவி வாச்யப்பொருளை முதலில் எடுத்தே வ்யங்கியத்தை உணர்த்தவேண்டும். கேட்போனாகிய ஸஹ்ருதயனும் வாச்யத்தை அறிந்தே வ்யங்கியத்தை உணரவேண்டும். ப்ரதானமான வ்யங்கியத்தை உணர்த்துவதற்காக வாச்யத்தை முதலில் கூறுவது என்ற வ்யாபாரம் கவிக்குளது. அதை உணர்வதற்காக வாச்சியத்தை முதலில் உணர்வது என்ற வ்யாபாரம் ஸஹ்ருதயனுக்குளது. இதனால் வ்யங்கியமே ப்ரதானமென்பதற்கு ஒரு தடையுமில்லை என்பதே இப்பிரகாணத்தின் கருத்தாகும். இம்மொழிபெயர்ப்பிலிருந்து இக்கருத்து சிறிதேனும் புலப்படுகிறதா?

(22)

தொ. வி. 16ம் பக்கத்தில்

"இவ்வாறு வாச்சியத்தினின்று வேறுபட்ட வியங்கியப் பொருளின் உண்மையையும் சிறப்பையுங் கூறி அதற்கு இலக்கணங் கூறுகின்றார்."

என்று அவதாரிகை யிடப்பட்டிருக்கிறது.

"பொருளோ சொல்லோ யாண்டப்பொருட்குத்
தன்னையோ பொருளையோ யுட்படுத்துநின்றே
அதனை யுணர்த்து மக்காவிய விசேடமே
தொனியெனக் கூறுப தொல்பெரும் புலவர்."

என்ற பதின்மூன்ருவது காரிகை மொழிபெயர்ப்பிலிருந்து காவியவிசேடத்திற்கே இக்காரிகையில் இலக்கணம் கூறப்படுகின்ற தென்பது வெளிப்படை. ஆகவே அவதாரிகையில் 'வியங்கியப்பொருளின் உண்மையையும் சிறப்பையும் கூறி அதற்கு இலக்கணம் கூறுகின்ருரென்பது எப்படிப் பொருந்துமென்பதை அறிஞர் நோக்குக. இதுவரை கூறப்பட்டது வியங்கியப்பொருள். இப்பொழுது கூறப்படுவது காவியவிசேடத்திற்கு இலக்கணம். வியங்கியப்பொருளுக் கல்லவே காரிகையில் கூறும் இலக்கணம்.

இந்நூற்பாவில் "பொருளையோ யுட்படுத்து" என்னுமிடத்தில் ஓகார வீற்றின் முன் உயிர்முதல்மொழி வந்து யகரவுடம்படுமெய்பெற்றிருப்பதற்கு இவ்விளக்குக்காரர் கண்ட ஆதாரம் என்னையோ?

'இவ்வாறு வாச்யத்தின் வேருன வியங்கியப்பொருளின் உண்மையையும் சிறப்பையும் கூறி பிரகிருதத்தில் (அதை) உபயோகப்படுத்திக் கூறுகிருர்' என்பதே இங்கு சரியான மொழிபெயர்ப்பாகும். **प्रकृते उपयोजयन्** என்ற விருத்தியின் கருத்தை மொழிபெயர்ப்பாளர் உணரவில்லை.

(23)

தொ. வி 18வது பக்கத்தில்,

'............இரவு அதனை இராகத்தாற் பார்த்திலது'

என்று ஸமாஸோக்தியின் உதாஹரணம் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

'பார்த்தல்' என்னும் வினை இரவுக்கு ஏலாதாதலின் இரவை நாயகியாகக் கொள்ளவேண்டுமென்பது சொல்லாற்றலினுலேயே பெறப்படுவதால் நாயிகா பாவம் வியங்கியமென்று சொல்லியிருப்பது பொருந்தாது' என்றிவ்வாறு பிறர் கூறியுள்ளதை உரையாசிரியர் தூஷித்திருக்கிருர். அதே தூஷணத்துக்கு இலக்காகுமாறு இம்மொழிபெயர்ப்பு அமைந்திருக்கின்றது.

न लक्षितं—रात्रिप्रारम्भोऽसाविति न ज्ञातं, तिमिरशबलितांशुदर्शने हि रात्रिमुखमिति लोकेन लक्ष्यते; न तु स्फुट आलोके என்ற லோசனத்தையும், **न ज्ञातं जनैरिति शेषः** என்ற கௌமுதி உரையையும் மொழிபெயர்ப்பாளர் நோக்கினரில்லை.

(24)

தொனிவிளக்கு 19ஆம் பக்கத்தில்,

"அநுராகமுடையள் சந்தி; பகலோ அதன் முன்னருளது; அவ்வாறிருந்தும் சேர்க்கையில்லை; அந்தோ இஃதென்ன தெய்வச்செயல்"

என்று மொழிபெயர்ப்புளது.

இங்கு तथापि न समागमः என்ற மூலத்திற்கு 'அவ்வாறிருந்தும்' என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் கொள்ளுமிடத்து அவ்வாறு இருப்பதால் சேர்க்கையிருக்கவேண்டும். ஆயினும் சேர்க்கையில்லை; தெய்வச் செயல் ஆச்சரியமானது. காரணமிருந்தும் காரியமுண்டாகவில்லை என்றிப்படிக் கூறவமையும்.

இங்கு மொழிபெயர்ப்பாளர் குறிப்பில்

> "தலைவனாகிய சந்திரன் கூறப்படவில்லை. அவ்விருவர்க்கும் புணர்ச்சி நிகழாமைக்குக் காரணம் பெரியோர் போன்ற பகல் எதிரில் நிற்பது"

என்று எழுதியிருக்கிறார்.

இங்குத் தலைவனை இல்லையென்று செய்து பெரியோரொருவரை முன்னால் கொண்டு நிறுத்துவது விந்தையிலும் விந்தை. இத்துடன் நிற்காமல்

> "பூர்ணிமையன்று மதி அந்திக்காலத்தில் தோன்றாது பின்னர்த் தோன்றுவதை இவ்வாறு வருணித்தனர் புலவர்"

என விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இங்குச் சற்று ஆராய்வோம்.

சந்திக்கு அநுராகமென்ற ஒரு காரணமிருந்தாலும் தலைவனை அப்போது பெறமுடியாமையாலும், பெரியோர் ஒருவர் முன் நிற்கிறபடியாலும் புணர்ச்சிக்குப் பிரஸக்தி இல்லை. இப்படிக் காரணமின்மையும் ப்ரதிபந்தகமும் இருக்க 'அவ்வாறு இருந்தும்' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும். 'அவ்வாறு இருந்தும்' என்பதற்கு 'மிக்க அன்போடுகூட இருந்தும்' என்பது பொருளாகும் என்று குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது. இரண்டைச் சொல்லிப் பிறகு 'அவ்வாறு இருந்தும்' என்று கூறும்போது ஒன்றை விட்டு ஒன்றை மாத்திரம் எடுத்துக்கொள்வதும், ப்ரதிபந்தகமும் மற்றொருகாரணமின்மையுமுள்ள விடத்தில் ஒரு காரணத்தால் மாத்திரம் காரியமுண்டாகுமென நினைத்துப் பொருள் கொள்வதும் வாக்ய ந்யாயங்களுக்கு முற்றிலும் முரண்பட்டது.

सन्ध्या என்றது பெண்பாலென்பதைக்கொண்டு இதைத் தலைவியாகக் கொண்ட விளக்குக்காரர், दिवसः என்றது ஆண்பாலென்பதைக் கவனித்து இதைத் தலைவனாகக்கொண்டு, ஏன் பொருள் உரைக்கலாகாது? இதற்கு முன்னுள்ள உதாஹரணத்தில் சந்திரன் தலைவனாக இருந்ததால் இங்கும் அவனே தலைவனாகவேணுமெனக் கருதினார் போலும். அங்கு ராத்திரி தலைவி, இங்கு சந்தி என்ற பேதமிருப்பதையாவது கவனித்து வேறொரு தலைவன் இருக்கலாமென உணரக்கூடாதா? दिवसः என்ற இதை ஒரு பெரியோராக்க வேண்டிய அவசியம் யாதோ? இங்கு गुरुपारतन्त्र्यादिनिमित्तोऽसमागम इत्यर्थः

அதாவது பெரியோர்களுக்கு அடங்கியிருக்கவேண்டிய நிலே முதலியன காரணமாகச் சேர்க்கை ஏற்படவில்லை என்று உரையாசிரியர் கூறியிருப்பதின் கருத்தை உணராது எங்கேயோ ஏறிடுகிறார்.

'அநுராகமுடையள் சந்தி' என்று உயர்திணையாக்கி ஸ்பஷ்டமாய்க் கூறியது ஸமாஸோக்தி என்ற பக்ஷத்திற்குச் சேராது என்பதையும் அறிஞர் அறிவர்.

(25)

தொ. வி. 27ஆம் பக்கத்தில்,

> "இவ்வாறு கூறப்பட்டதும், இனிக் கூறப்போகும் பிரிவு, உட்பிரிவு இவற்றின் பெருவிடயத்தைக்கொண்டதுமான தொனியின் விளக்கம் பிரசித்தமான அணிவிசேடங்களின் விளக்கத்தோடு ஒத்ததேயன்றித் தனித்தனியே பாராட்டத்தக்கதன்று எனத் தொனியைப்பற்றித் துணிவுகொண்டாரின் பரபரப்பு தக்கதன்று. இருப்பினும் அவர்களிடத்துச் சிறிதும் எக்காரணம்பற்றியும் வெகுளியால் அவமதிப்புக் காட்டுதல் வேண்டா. இவ்வாறு தொனியை மறுத்துப்பேசியோர்க்கு விடை அளிக்கப்பட்டது"

என மொழிபெயர்ப்பிருக்கின்றது.

இதற்கு மூலம் பின்வருமாறு:—

न चैवंविधस्य ध्वनेर्वक्ष्यमाणप्रभेदतद्भेदसङ्कलनया महाविषयस्य यत्प्रकाशनं तद(त्र?) प्रसिद्धालङ्कारविशेषमात्रप्रतिपादनेन तुल्यमिति तद्भावितचेतसां युक्त एव संरम्भः । न च तेषु कथञ्चिदीर्ष्यया कलुषितशेमुषीकत्वमाविष्करणीयम् । तदेवं ध्वनेस्तावदभाववादिनः प्रत्युक्ताः ॥

இங்கு முதல் வாக்யத்தின் ஆரம்பத்திலிருக்கும் **न च** என்பதைக் கடைசியில் இருக்கும் **युक्त एव संरम्भः** என்பதோடு சாத்திரியார் அந்வயித்து விட்டாராதலால் விபரீதமாய் மொழிபெயர்க்கின்றார்.

'பரபரப்பு தக்கதன்று' என்ற இப்பொருளைக் கருத்தில்கொண்டு **न च युक्त एव संरम्भः** என்றிப்படி வடமொழியில் தேர்ச்சியுடையவர்கள் கூற மாட்டார்கள். **एव** என்ற பதத்தை மொழிபெயர்த்தவர் நோக்கவே யில்லை.

'எனத் தொனியைப்பற்றித் துணிவுகொண்டாரின்' என்றிப்படிக் கூறுகின்ற விளக்கு, இதற்குக்கீழ் கூறியிருப்பதெல்லாம் தொனியை மறுப்பவரின் துணிவு என்றே கருதியிருப்பதாய்த் தோன்றுகின்றது.

"இவ்வாறு கூறப்பட்டதும் இனிக் கூறப்போகும் பிரிவு உட்பிரிவு இவற்ருன் பெருவிடயத்தைக் கொண்டதுமான தொனியின் விளக்கம் பிரசித்தமான அணி விசேடங்களின் விளக்கத்தோடு ஒத்ததே" என்றிவ்விதமா தொனியை மறுத்தவர்களின் துணிவு? இவ்வாறு கூறப்பட்டது யாராலே? மறுத்தவர்களாலேயா? இனி கூறப்போவது யார்? மறுப்பவர்களா? பிரிவு உட்பிரிவு இவற்ருன் மஹாவிடயத்தைக்கொண்டதென்றது யார்? பூர்வபக்ஷியா? ஸித்தாந்தியா? ஸித்தாந்தி சொல்வதையே ஒப்புக்கொண்டு பூர்வபக்ஷி இவ்விடத்தில் பேசுகிருன் என்ருல் மஹாவிடயத்தைக்கொண்டதென்பதை ஒப்புக்கொண்டா பூர்வபக்ஷி அது அலங்காரமென்கிருன்? ஏதாவது பொருந்துகின்றதா என்பதை புத்திமான்கள் கவனிக்கவேண்டும்.

உண்மை யாதெனில் கூறுவோம் :—

தொ. வி 4ஆ-ம் பக்கத்தில் "அன்றியும் கவிக்கூற்றுக்கள் பலவகைப்பட்டவாதலின், புகழுடைக் காவிய விலக்கணக்காரர்களால் முன்னரே கூறப்படாத ஒரு சிறுவகையிருப்பினும் அதனைத் தொனி தொனி எனக் கூக்குரலிட்டுக் கண்ணைமூடித் தாமே சுவையறிஞர் எனச் செருக்கினைக் கொண்டு சிலர் ஆடுகின்றனர்; அங்ஙனம் செய்தற்குக் காரணம் யாதோ" எனக் கூறுமிடத்தில், ஸித்தாந்திகள் ஒரு சிறு விஷயத்தில் பெரும் ஆரவாரம் செய்வதாகவும் பொய்யே சுவையறிஞர் என வெண்ணிக் கண்ணைமூடிக் கூத்தாடுவதாகவும் பேசி பூர்வபக்ஷிகள் அவர்களிடம் அவமதிப்பும் அசூயையும் காட்டியிருந்தனர். இவர்களுக்கு இங்கே நூலாசிரியர் பதிலுரைக்கின்ருர் என்பதை அந்தோ அறிகின்றிலது விளக்கு. न च என்பது तुल्यम् என்றவிடத்தில் அந்வயிக்கின்றதென்பதை அறிய இயலாது போகவே तद्भावितचेतसाम् என்றது பூர்வபக்ஷிகளைக் குறித்ததாகக் கொண்டது.

न च तेषु என்ற இரண்டாவது வாக்யம் பூர்வபக்ஷிகளிடத்தில் ஸித்தாந்திகள் கோபமும் அவமதிப்பும் காட்டக்கூடாதென ஓர் ஸதுபதேசம் செய்வதாகக் கொள்கின்றது. 'இருப்பினும்' என்று தாமாக ஓர் பதத்தைச் சேர்க்கின்றது. இவ்விபரீதமொன்றுமில்லாது மூலத்திற்குச் சரியான மொழிபெயர்ப்பு யாதெனில், கேண்மின்.

'இவ்விதமாய், மேலே கூறப்படும் பிரிவு உட்பிரிவுகளின் தொகையால் பெரும் விஷயத்தைக்கொண்ட தொனியின் யாதொரு விளக்கமுண்டோ, அது பிரஸித்தமான அணியொன்றின் ஒரு சிறுவகையை விளக்குவதோடு ஒத்ததாக ஆகவே ஆகாது. ஆதலின் தொனியில் ஊற்றமுள்ள நெஞ்சினையுடையோர்க்கு அதில் ஆரவாரம் மிகமிகத் தகும் அவர்கள் விஷயத்தில் அசூயையினலே புத்திக்கலக்கத்தைக் (பூர்வபக்ஷிகள்) காட்டவே கூடாது.'

இப்படியிருக்க மஹாமஹோபாத்யாய, வித்யாவாசஸ்பதி, குலபதி குப்புஸ்வாமி சாஸ்திரியாரவர்கள் பலவிடங்களில் திருத்தியும் உதவிபுரிந்தனர் என்று முகவுரையில் அப்பெரியாரின் பெயரைப் புகுத்தியிருப்பதைக் காண அவரது அடியார்கள் மிக வருந்துகின்றனர்.

இப்படி விபரீதமாகப் பொருளுரைத்திருக்குமிடங்களில் சிலவற்றைக் காட்டினேம். இன்னும் சில்லரை விஷயங்களில் சிலவற்றைக் குறிப்பிடுகின்றேம்.

(26)

தொ. வி. 7ஆம் பக்கம் கீழ்க்குறிப்பு 2-ல்,

'இது தோழி வழியிடைச் செல்வோனை நோக்கிக் கூறிய கூற்று'

என்று எழுதப்பட்டிருக்கிறது.

இது எங்ஙனம் கிடைக்கப்பெற்றது? தலைவியின் கூற்ருகவே உரையாசிரியர் கூறுகின்றார். காவ்யப்ரகாசத்துக்கு பட்டவாமனர் இயற்றிய பாலபோதினீ என்ற உரையிலும் தலைவியின் கூற்ருகவே பொருள் உரைக்கப்பட்டிருக்கிறது. வேறு நூலில் தோழி கூற்ருகக் கூறப்பட்டிருந்தால் அதை எடுத்துக் காட்டியிருக்கவேண்டும்.

(27)

தொ. வி. 8ஆம் பக்கத்தில்

'போமின் என்பதற்கு வியங்கியப் பொருள் போகன்மின் என்பதாகும்'

என்று வரையப்பட்டிருக்கிறது.

அது இப்பதத்துக்கு மாத்திரம் வியங்கியமன்று. கோதாவரிக் கரையில் வாழும் சிங்கத்தினல்' என்றிவையும் சேர்ந்து அப்பொருளுக்கு வியஞ்ஜகமென்றறிக.

(28)

தொ. வி. பக்கம் 8ல்

'வீழன்மின் என்ற எதிர்மறை வாச்சியமாயிருக்க விதியாகிய வீழ்மின் என்பது வியங்கியமாகின்றது"

என்று குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது.

இங்கு ....निषेधाभावोऽत्र विधिः; न तु निमन्त्रणरूपोऽप्रवृत्तप्रवर्तनास्वभावः; सौभाग्याभिमानखण्डनाप्रसङ्गात् அதாவது,

நீவிர் வந்தால் ஏற்பேன்; வரக்கூடாதெனவில்லை என்றிவ்வளவே இங்கு வியங்கியம். அவச்யம் வரவேணுமென்பது வியங்கியமாகாதென உரையாசிரியர் கூறியிருப்பதை மொழிபெயர்த்தவர் நோக்கவில்லை.

(29)

தொ. வி. 9ஆம் பக்கத்தில்

'பாழும் பெண்ணே'

என மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மூலம் हते என்றிவ்வளவே இருக்குமாகில் இம்மொழிபெயர்ப்புப் பொருந்தும். हताशे என்றே மூலமுளது 'உனது விருப்பம் பாழாய்ப்போக' உனது ஆசையில் இடிவிழ' என்றிப்படி மொழிபெயர்த்திருக்க வேண்டும். இக் கருத்தை வைத்தே வியங்கிய விசேஷம் உரையில் உரைக்கப்பட்டிருக்கிறது.

(30)

தொ. வி. பக்கம் 9, குறிப்பு 4ல்

'............... காமக்கிழவனைத் தாமிருக்குமிடம் வருமாறு செய்யும் பெண்டிர்க்கும் அபிசாரியர் என்று பெயர்'

எனக் காணப்படுகிறது.

இதற்கு பிரமாணம் காட்டியிருக்கவேண்டும். அமரம் முதலியவற்றில் காதலனிருக்குமிடம் தேடித் தாமே போகும் பெண்டிர்க்கே இப்பெயர் கூறப் பட்டிருக்கின்றது.

(31)

தொ. வி. 15ஆம் பக்கத்தில்,

"நன்கு ஆய முயலுகின்றனர்"

என ஒன்பதாவது காரிகையின் அவதாரிகையில் மொழிபெயர்ப்பு இருக்கின்றது.

இங்கு उपाददते என்பது மூலம். 'எடுக்கின்றார்கள்' என்பது இதன் பொருள். இல்லாத பொருளை ஏன் உரைக்கவேண்டும்?

(32)

தொ. வி. 19-ஆம் பக்கம் குறிப்பு 1ல்,

"நான் உன்னை ஒரு கணமேனும் பாராவிடின் கவலையுற்றிருப்பேன்; இவ்வளவே போதும்; உனக்குப் பிரிய மின்மையைக் கூறுவதால் என்?"

எனக் காணப்படுகிறது.

இங்கு 'கவலையுற்றிருப்பேன்' என்று வாக்யத்தை முடித்திருப்பது மிகவும் ரஸவிருத்தம். 'கவலையுற்றவளாய்' என்று வாக்யமுடிவு இல்லாமலேயே பேச்சை நிறுத்துகின்றுள் தலைவி. ப்ரியே என்று சேஷம் என்று உரையில் காட்டப்பட்டிருப்பதையும் மொழிபெயர்ப்பாளர் கவனிக்கவில்லை.

(33)

தொ. வி. 21ஆம் பக்கம் குறிப்பு 3ல்,

> "பரியாயோக்தத்திற்குப் பாமஹர் கூறிய உதாஹரணமாவது வீட்டிலோ வழியிலோ வேதமோதும்பார்ப்பனர் உண்ணுத உணவை உண்ணமாட்டோம். அது நஞ்சுகலந்த உணவை நீக்குதற்கே."
> (இது கண்ணனுல் சிசுபாலனுக்குக் கூறப்பட்டது.)

என வரையப்பட்டிருக்கிறது.

இங்கு "அது நஞ்சுகலந்த உணவை நீக்குதற்கே" என்பது உதாஹரணத்தில் சேர்ந்ததல்ல. குறிக்கப்படும் பொருள் இதுவென்று காட்டுவதற்காகப் பாமஹர் கூறியது. அஃது பாமஹருடைய வார்த்தை. கண்ணன் பேச்சில் அடங்கியதல்ல. இவ்விடம் உரையில் ஸ்பஷ்டம்.

(34)

தொ. வி. பக்கம் 8 குறிப்பில்,

> "இவ்வாறே, பெரிதினிது பேதையார் கேண்மை (குறள் 839) என்றவிடத்து இனிது என்ற விதி இன்னுது என்ற மறையான வியங்கியப்பொருளைக் கொண்டது காண்க"

என்று எழுதப்படுகிறது.

இங்கு பேதையார் என்ற சொல்லோடு சேர்ந்து நிற்றலினுலேயே அது ஒருகாலும் இனிதாகா தென்பது ஸ்பஷ்டமாய்த் தோற்றுகின்றதாதலின் இது தொனியாகா தென்றறிக.

முதற்கதிர் 34 பக்கங்களே கொண்டது. ஆதலின் யாமும் இதுடன் நிற்கின்ருேம். இனி மற்றக் கதிர்களையும் இப்படியே ஆராயலாம்.

(தொடரும்)

நெய்தற்குரிய சிறு பொழுது

A. BHUVARAHAM PILLAI

I

ஓராண்டின் கூறுபாடுகளாகிய கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன பெரும் பொழுதுகளென்றும், ஒரு நாளின் கூறுபாடுகளாகிய வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்பன சிறு பொழுதுகளெனவும் கூறப்படும். அகப்பொருட் பகுதியில் கூறப்படும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற திணைப்பகுதிகளில் ஒவ்வொன்றற்கும் பெரும் பொழுது சிறு பொழுதுகளில் இவை இவை உரிய எனப் பிரிக்கப்பட்டுள்ளன.

நெய்தலுக்குச் சிறு பொழுது கொள்ளுமிடத்துப் பழைய உரையாசிரியர்கள் யாவரும் ஞாயிறு வீழ் பொழுதாகிய பிற்பகலே கொள்வாராயினர். ஆசிரியர் சிவஞான முனிவர் தாம் எழுதிய தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் ஞாயிறு எழுபொழுதாகிய முற்பகற் பொழுதே நெய்தலுக்குரிய சிறு பொழுதெனக்கொண்டு, தம் கொள்கையைப் பல தடை விடைகளால் விளக்கியுள்ளார்.

நெய்தலுக்குச் சிறு பொழுது கூறும் தொல்காப்பியச் சூத்திரத்தை நச்சினார்க்கினியர்,

> "வைகுறு விடியல் மருதம் எற்பாடு
> நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும்"

என்றும், இளம்பூரணர்,

> "வைகறை விடியல் மருதம்"
> "எற்பாடு நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்"

என்றும் கொள்வாராயினர். சூத்திர பாடத்தில் இருவருக்குள் வேறுபாடிருப்பினும் பொருள் கொள்வதில் வேறுபாடில்லை. இருவரும் ஞாயிறு தோன்றுதற்கு முன்னுள்ள வைகறையும் ஞாயிறு தோன்றும் பொழுதாகிய விடியற்காலமும் மருதத்திற்குரிய சிறு பொழுதுகளென்றும், ஞாயிறு வீழ் பொழுதாகிய பிற்பகல் நெய்தலுக்குரிய சிறு பொழுதென்றும் கொண்டனர். ஏனையாசிரியர் பலரும் இங்ஙனமே கொண்டனர். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார், முல்லைக்குரிய மாலைப்பொழுதையே நெய்தலுக்கும் சிறு பொழுதாகக் கூறினர்.

சிவஞானமுனிவர், தொல்காப்பியச்சூத்திரத்தை நச்சினார்க்கினியர் கொண்ட முறைப்படியே கொண்டு பொருள் கொள்ளுமிடத்து அவர் கொள்கையை மறுத்து வேறு கூறுவாராயினர். நச்சினார்க்கினியர் "வைகுறு விடியல்" என்பதை வைகுறுவும் விடியலும் என (உம்மைத் தொகையாக) இரண்டாகக் கொண்டு, வைகுறு - இரவின் பிற்பகுதியாகிய நேரம் எனவும், விடியல்—பகலின் முற்பகுதியாகிய ஞாயிறு எழுபொழுதெனவும், எற்பாடு - பகலின் பிற்பகுதியாகிய ஞாயிறு வீழ்பொழுதெனவும், இது நெய்தலுக்குரியதென்றும் கூறினர்.

சிவஞானமுனிவர் "வைகுறு விடியல்" என்பதை வைகுறுகின்ற விடியல் என ஒன்றாகக் (வினைத்தொகையாக) கொண்டு, பொழுது புலர் நேரமே விடியல் என்றும், அது வைகறை எனவும் கூறப்படுமென்றும், அது மருதத்திற்குரிய சிறு பொழுதென்றும், எற்பாடு - ஞாயிறு எழுபொழுதாகிய முற்பகல் என்றும் அது நெய்தற்குரித்தென்றும் கூறினர். படுதல் என்பது உண்டாதல், அழிதல் என்னும் இரு பொருளும் தரும் சொல்லாக நிற்றலின் இங்ஙனம் வேறுபட்ட கொள்கைகள் தோன்றுவனவாயின.

ஆசிரியர் கொள்கைகள் இங்ஙனம் மாறுபடுதலின், எற்பாடு என்பதற்குத் தொல்காப்பியர் கருத்து யாதாகலாம் என்பதைப் பிறவழிகளாற்றுணிதலே பொருத்தமாகும்.

II

ஒவ்வொரு திணைக்குமுரிய சிறுபொழுது அவ்வத் திணைக்குரிய உரிப்பொருளைச் சிறப்பிப்பதாக இருத்தலே பொருத்தமாகும். நெய்தலுக்குரிய உரிப்பொருள் இரங்கல். தலைவன் பல காரணங்களால் தலைவியை விட்டுப் பிரிதல் உண்டு. அந்நிலையில் தலைவி, தலைவன் பிரிவிற்கு ஆற்றாது வருந்துதல் இரங்கலாகும். (தலைவன் வருந்துதலும் கூடுமேயெனின் அவன் உள்ளம் அவன் மேற்கொண்ட வினைமேற்சேறலின் தலைவியை நினைந்து இரங்குதல் சிறுபான்மையாதலின் தலைவியாற்றாது இரங்கலே நூல்களிற் பெரும்பாலும் கூறப்படும். (திருக்குறளில் "தனிப்படர்மிகுதி" என்ற அதிகாரப்பொருளை விளக்குமிடத்துப் படர்மிகுதி தலைவன்கணின்றித் தன் கண்ணேயாதல் கூறுதல் ; அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று" எனப் பரிமேலழகர் கூறியிருத்தல் காண்க.) ஞாயிறு வீழ் பொழுதாகிய பிற்பகல் தலைவியின் ஆற்றாமையை மிகுவிக்குமேயன்றிக் காலைப்பொழுது மிகுவிக்கு மாறில்லை. காலைப்பொழுதில் இரைதேடச் சென்ற விலங்குகளும் பறவைகளும் ஞாயிறு வீழ்பொழுதில் தத்தம் இடம் நோக்கியும் துணையுள்ளியும் திரும்பிவருதலையும், அதன்பின் மாலைப் பொழுதில் உண்டாகும் திங்களின் தோற்றம் முதலியவைகளையும் கண்டு தலைவி தலைவனை நினைந்து ஆற்றாமை மீக்கூர்தலும், இரவில் ஊரெல்லாம் துயில் கொள்ளும் நிலையில் தான் துயில்கொள்ளாது, அன்றிற் குரல், கடலோசை

முதலியவற்றைக் கேட்டு அங்ஙனமே ஆற்றுமை மீக்கூர்தலும் இயல்பாகும். இங்ஙனம் பிற்பகல் தொடங்கி இரவு முழுவதும் தலைவிக்கு ஆற்றுமை பெருகி நிற்றலால், அவ்வாற்றுமை பெருகுதற்குரிய காலத்தின் முற்பகுதியாகிய பிற்பகலே நெய்தலுக்குரிய சிறுபொழுதெனக் கோடல் பொருத்தமாம்.

"வள்ளிதழ் நெய்தல் கூம்பப் புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேரச்
செல்சுடர் மழுங்கச் சிவந்துவாங்கு மண்டிலம்
கல்சேர்பு நண்ணிப் படாடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண்மாலை." (நற்றிணை 117.)

"கானன்மாலைக் கழிநீர் மல்க
நீனிற நெய்தல் நிரையிதழ் பொருந்த
ஆனுதலைக்குங் கடன் மீனருந்திப்
புள்ளினங் குடம்பை யுடன்சேர்புள்ளார்."—(நற்றிணை 382.)

என்ற நற்றிணைப் பாக்களிற் பறவைகள் குடம்பை சேர்தலைக் கண்ட தலைவி தலைவனை நினைந்து வருந்துதலும் முற்பாட்டில் ஞாயிறு வீழ்தலும் மாலையும் ஒருங்கு வருதலும் காண்க.

"கார்த்தரங்கந்திரை தோணி சுறுக்கடன் மீனெறிவோர்
போர்த்தரங்கந் துறை மானுந்துறைவர்தம்போக்கு மிக்க
தீர்த்தரங்கன் றில்லைப் பல்பூம் பொழிற்செப்பும் வஞ்சினமு
மார்த்தரங்கஞ் செய்யுமாலுய்யுமா றென்கொலாழ்சுடரே."
—(திருக்கோவையார் 187.)

என்ற திருக்கோவையார் செய்யுளில் தலைவி செல்சுடர்நோக்கி வருந்தினளாகக் கூறப்பட்டிருத்தல் காண்க. பிரிந்த தலைவி ஞாயிறு வீழ்பொழுது தொடங்கி இரவு முழுவதும் தலைவனை நினைந்து வருந்தினளாகக் காண்டலல்லது, காலைப்பொழுதில் தலைவனை நினைந்து வருந்தினளாக இலக்கியங்களிற் காண்டலரிது. இவற்றுள்ளும் தலைவியின் துன்பத்தை மிகுவிப்பதில் ஞாயிறு வீழ் பொழுதினும் மாலையும் இரவுமே நூல்களிற் சிறப்பாகக் காணப்படுகின்றன. திருக்குறளில் நாணுத்துறவுரைத்தல், படர்மெலிந்திரங்கல், நினைந்தவர் புலம்பல், கனவுநிலை யுரைத்தல், பொழுதுகண்டிரங்கல் முதலிய அதிகாரங்களில் மாலையும் இரவுமே கூறப்பட்டிருத்தல் காணலாம். இது கருதியே அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரையில் நெய்தலுக்கு மாலையைச் சிறுபொழுதெனக் கூறினர் போலும். ஞாயிறு வீழ்பொழுது துன்பமிகுதி தொடங்குங் காலமாக இருத்தலின் தொல்காப்பியர் அதனை நெய்தலுக்குக் கூறினர் எனக் கொள்க.

புறநானூறு 149ம் பாட்டில், நள்ளியின் கொடையைச் சிறப்பிக்குமிடத்து,

"மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர்"

என்ற இப்பகுதியில், பாணர்கள் இன்ன நேரத்தில் இன்ன பண் பாடுதற் குரியது என்ற வரலாற்றுமுறைமையை மறந்து, மாலையில் மருதப்பண்ணையும் காலையில் செவ்வழிப் பண்ணையும் பாடுவாராயினர் என்றனர் வன்பரணர் என்னும் புலவர். எனவே வரலாற்று முறைப்படிப் பாடினால் காலையில் மருதப் பண்ணும் மாலையில் செவ்வழிப் பண்ணும் பாடுதல் வேண்டும் என்பது பெறப்படும்.

> "அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
> சீறியாழ் செவ்வழி பண்ணி."—(புறம்–144.)

என்றதனாலும் மாலைக்குச் செவ்வழிப் பண் உரித்து என்பது பெறப்படும். செவ்வழிப்பண் இரக்கத்திற் குரியது. அது விளரிப்பண் என்றும் இரங்கற் பண் என்றும் கூறப்படும். காலைப்பொழுது இரக்கத்திற் குரித்தாயின் செவ்வழிப்பண் காலைக்குரித்தன்றென விலக்கப்படுதலாகாது. இதனாலும் காலைக்கு இரக்கம் உரித்தன்று என்பது பெறப்படும். மருதப்பண் என்ற பெயரே அப்பண் மருதத்திற் குரித்து என்பதனை யுணர்த்துவதோடு, அப்பண்ணுக்குரிய காலைப்பொழுது மருதத்திற்குரித்து என்பதனையும் உணர்த்துவதாகும்.

III

காலைப்பொழுது துன்பமிகுதற் குரியதாகக் கூறப்படாமையே யன்றி, மற்றிதற்கு மாறாகத் துன்பம் தணிதற்குரிய பொழுதாகக் கூறப்பட்டிருத்தலை இலக்கியங்களிற் காணலாம். திருக்குறளிற் பொழுதுகண்டிரங்கல் என்னும் அதிகாரத்தில்,

> "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலருமிந் நோய்."

என்ற திருக்குறளால் பிரிந்த தலைவிக்குப் பிரிவாற்றுமையாகிய காமநோய் காலையில் அரும்பி, பகற்பொழுது முழுவதும் பேரரும்பாகி, மாலையில் மலரும் என்று கூறப்பட்டது. "துயில் எழுந்த பொழுதாகலின் கனவின்கட் கூட்டம் நினைந்தாற்றுதல் பற்றிக் காலை அரும்பி என்றும், பின், பொழுது செல்லச் செல்ல அது மறந்து பிரிவுள்ளி யாற்றுளாதல் பற்றிப் பகலெல்லாம் போதாகி என்றும், தத்தம் துணையுள்ளி வந்துசேரும் விலங்குகளையும் மக்களையுங் கண்டு, தான் அக்காலத்தில் நுகர்ந்த இன்பம் நினைந்தாற்றுமை பற்றி மாலை மலருமென்றுங் கூறினுள்" எனப் பரிமேலழகர் விளக்கங் கூறியதும் இவ்வதிகாரத் தொடக்கத்தில் மேலதிகாரத்தோ டியைபு கூறுமிடத்துக் "கனு முந்துருத வினையில்லை" என்பதுபற்றிப் "பகற்பொழுதாற்றி யிருந்தாட்கு உரியதாகலின் இது கனவுநிலை யுரைத்தலின்பின் வைக்கப்பட்டது" என்று கூறியதுங் காண்க. காலை யரும்பி என்றதனல் காலைப்பொழுதில் ஆற்றுமை மிகமிகக் குறைந்த நிலையில் இருக்கு மென்பதும், அதனல் அப்பொழுது, இரங்கலையுரிப்பொருளாக

உடைய நெய்தலுக்கு ஏலா தென்பதும், மாலை மலரும் என்றதனுல் மாலையின் முற்பொழுதாகிய ஞாயிறு வீழ் பொழுதிலே ஆற்ருமை மலர்தற்கு முன்னிலை யாகிய அரும்பு மிக முதிர்ந்தநிலையில் இருக்கு மென்பதும் அக்காலமே நெய்தலுக்கேற்ற பொழுதென்பதும் பெறப்படுவனவாம்.

> " காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்
> மாலைக்குச் செய்த பகை "

இதன்கண் தலைவி காலைப்பொழுதிற்குத் தான் ஒரு நன்மையும் செய்யாதிருக் கவும் அது தனக்குத் துன்பம் செய்யாமல் நன்மை செய்கின்ற தென்றும், மாலைப் பொழுதிற்குத் தான் தீங்கொன்றும் செய்யாதிருக்கவும் அது தனக்கு இன்பஞ் செய்யாது துன்பஞ் செய்கிற தென்றும் கூறினுள். திருத்தக்கதேவர் சீவக சிந்தாமணியிற் பதுமையாரிலம்பகத்தில், சீவகனைப் பிரிந்து வருந்திய பதுமைக்கு,

> " அலங்கலுங் குழலுந் தோழி யங்கையி னடைச்சியம்பூம்
> பொலங்கலங் கொடியனுடன் கண்பொழி கலுழியொற்றிக்
> கலந்தகில் நாறுமல்குற் கவான்மிசைக் கொண்டிருந்தாள்
> புலர்ந்தது பொழுது நல்லாள் நெஞ்சமும் புலர்ந்ததன்றே "

எனப் பொழுது புலர்ந்ததும் நெஞ்சு தெளிந்ததாகக் கூறியதும், கம்பர் இராமாயணத்தில் சூர்ப்பனகைப் படலத்தில், இராமபிரானைக் கண்டு காத லுற்று அப் பெருமானை யடையப்பெருமையால் இராமுழுவதும் வருந்திய சூர்ப்பனகை,

> " விடியல் காண்டலி னீண்டுதன் னுயிர்கண்டவெய்யாள் " (சூர்ப்பனகை 90)

என விடியற்காலத்தில் தன் துன்பந்தணியப் பெற்றனள் என்று கூறியதும், மிதிலைக்காட்சிப் படலத்தில், இராமபிரான் சீதையின் காட்சியால் இராமுழுதும் வருந்திய நிலையைக் கூறி, விடியற்காலத்தைக் கூறுமிடத்து,

> " அல்லாழிக் கரைகண்டான் ஆயிரவாய் மணிவிளக்க மழலுஞ்சேக்கைத்
> தொல்லாழி துயிலாதே துயாழி நெடுங்கடலுட் டுயில்கின்றுனே "

என விடியற்காலத்தைத் துன்பம் விளைத்த கங்குற் கடலுக்குக் கரையாகக் கூறியதும் காண்க.

> கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்
> குறும்பொறை நாடன் நல்வய லூரன்
> தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற்
> கடும்பகல் வருதி கையறு மாலை
> கொடுங்கழி நெய்தலுங் கூம்பக்
> காலை வரினுங் களைஞரோ விலரே. (ஐங்குறுநூறு 183)

என்ற ஐங்குறுநூற்றுப் பாட்டில், பிரிவாற்றுமையால் மிகப் பெருந் துன்ப முற்ற தலைவி துன்பத்திற் குரித்தல்லாத நண்பகற் பொழுதும் பெருந் துன்பம் விளைக்கும் மாலைப் பொழுதுபோற் றேற்றியதாற் "கடும்பகல் வருதி கையறு மாலை" என்றனள். "பண்டையிற் கடும்பகல் வருதி" என்றது, பண்டு வருங் காலத்திலே வந்தாற்போலப் பிறர்க்குத் தோன்றக் கடும்பகற் கண்ணே வாராநின்ருய் என்றவாறு" என்பது அதன் விளக்கவுரை.

"குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே"

என்ற குறுந்தொகைப் (234) பாடற் பகுதியில் காலை நண்பகல் இரண்டும் மாலையாகக் கூறப்பட்டதும் அளவிறந்த துன்பத்தால் நிகழ்ந்ததாம். இவ் விரு பாட்டுக்களிலும் காலையும் நண்பகலும் துன்பந் தந்தனவாகக் கூறுது மாலையாகக் கூறினமையால் அவை இரங்கலுக்குரியன அல்ல என்பதும் மாலையே இரங்கலுக் குரியது என்பதும் பெறப்பட்டன. இவ்வாறு வரும் இலக்கியப் பகுதிகளால் விடியற்காலம் துன்பந் தணிதற்குரியதென்று நன்கு தெளியலாம்.

"ஆங்கவை நலியவு நீங்கி யாங்கும்
இரவிறந் தெல்லை தோன்றல தலர்வாய்
அயலிற் பெண்டிர் பசலைபாட
வீங்கா கின்றாற் றேழி" (நற்றிணை 378)

என்ற நற்றிணைப் பாடற் பகுதியால், இரவிற் பிரிவாற்றுது வருந்திய தலைவி, "ஞாயிறு இன்னும் தோன்றிற் றிலதே" என்று நினைந்தனள் எனக் கூறப் பட்டமையின், அது தோன்றின், அவ்வருத்தம் தணியும் என்பது பெறப்படுவ தாகும்.

"பெண்பிறந்தா ரெய்தும் பெருந்துயரங் காண்கிலே னென்
றொண்சுடரோன் வாரா தொளித்தான்"

"அஞ்சுடர் வெய்யோன் அணிநெடுந்தேர் தோன்றுதால்"
(திருவாய்மொழி 5-4-4, 6)

என்ற திருவாய்மொழிப் பாசுரப் பகுதிகளும் மேற்காட்டப்பட்ட நற்றிணைப் பாடற் பகுதி போன்ற கருத்துடையவாதல் காண்க.

"கண்பாயல் கொண்டுள்ளாக் காதலவன் செய்த
பண்புதா வந்தவென் றெடர்நோய் வேது
கொள்வது போலுங் கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிரும் பரப்பிப் பகலொடு
செல்லாது நின்றீயல் வெண்டுவல் நீசெல்லிற்
புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா லதனெடியான்
செல்லாது நிற்ற விலேன்" (நெய்தற் கலி 28)

என்ற கலித்தொகைப் பாடற்பகுதியில் செல்சுடரை நோக்கி "நீ செல்லா திருத்தல் வேண்டும்" என்று வேண்டியதனுல், ஞாயிறு வீழ்பொழுது தொடங்கித் துன்பம் பெருகு மென்பது பெறப்படும். அன்றியும், "நோய் வேது கொள்வது போலும் கடும்பகன் ஞாயிறே" என்றதனுல் ஞாயிறு எழுபொழுது தொடங்கி நண்பகல் வரைத் துன்பம் பெருகுதலில்லை என்பதும் பெறப்படும். "மாலை மலரு மிந்நோய்" என்றதனுல், மாலைக்கு முற்பொழுது பிற்பகல், அதற்கு முற்பொழுது நண்பகலாதலின் அந்நண்பகல் பெருகிய நிலைக்குரித்தன்றுதல் காண்க. இங்ஙனம் பிரிவாற்றுது துன்புறுந் தலைவி, ஞாயிறு தோன்றுதல் வேண்டு மென்றும், செல்சுடரை நோக்கி நீ மறையா தொழிதல் வேண்டுமென்றும் கூறுதல் போல, எழுசுடரை நோக்கி யான் துன்புறுதிருத்தற்பொருட்டு நீ எழாதிருத்தல் வேண்டும் என்று கூறும் பாக்கள் காணப்படாமை நினைத்தற் குரித்தாகும்.

IV

காலைப்பொழுது பிரிந்திருப்பார்க்குத் துன்பந் தாராமையே யன்றி பிரியாது கூடியிருப்பார்க்கு ஓராற்றுற் றுன்பந் தருதற் குரியதுமாகும். "காலைக்குச் செய்த நன்றென் கொல்" என்ற திருக்குறளின் விளக்க உரையிற் பரிமேலழகர் "கூடிய ஞான்று பிரிவரென் றஞ்சப் பண்ணிய காலை, அஃதொழிந்து இஞ்ஞான்று கங்குல் வெள்ளத்திற்குக் கரையாய் வாராநின்ற தென்னுங் கருத்தால் நன்றென்கொல் என்றும்" எனக் கூறியது காண்க. இக்கருத்து,

"வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்"

"பெறுஅமை யஞ்சும் பெறிற் பிரிவஞ்சும்
அறுஅ விடும்பைத்தென் னெஞ்சு"

என்ற திருக்குறள்களிற் பெறப்படுவதாகும்.

"குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றன்றென் றூய நெஞ்சம்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்று லெனவே. (குறுந்தொகை 157)

என்ற குறுந்தொகைச் செய்யுள், பூப்பெய்திய தலைமகள் உரைத்தது எனக் கூறப்பட்டுள்ளது; ஆயினும் அச் செய்யுளை நோக்குமிடத்துமேற்காட்டப்பட்ட திருக்குறட்பாக்களில் "வரிற்றுஞ்சா" என்றும், "பெறிற் பிரிவஞ்சும்" என்றும் கூறப்பட்ட கருத்தோ டொத்துள்ளதாகத் தோன்றுகின்றது.

V

காலைப்பொழுது நெய்தலுக் குரியதெனச் சிவஞான முனிவர் கொண்டதற் குரிய காரணங்களை யாராய்வோம்.

"முல்லை முதலாக வைத்தெண்ணியது முதற்பொருள் முறைபற்றி யென்ற தென்னை? காடுறை யுலக முதல்வைத் தெண்ணுதலின் நில முதற் பொருள் கூறியதே. நிலமுறை பற்றியன்று. இனிக் கால முதற்பொருள் இரண்டனுள் பெரும்பொழுது ஞாயிற்றிற்குரிய சிங்கவோரை முதல்வைத் தெண்ணுதல் முறையாயினும் திணைகள் ஒன்றும் பலவும் பெரும்பொழுது பெறுதலின், அம்முறைபற்றி முறைகோடல் பொருத்தமன்று. சிறுபொழுது காமத்திற்குச் சிறந்த விராக்காலத்தின் முற்கூறு முதல்வைத் தெண்ணியது முறையாயினும் எற்பாடாகிய பின்பகலை யிறுதிக்கண் வையாமையின், அதுவு முறைபற்றிக் கூறியதன்று. இங்ஙனமாகலானும், வேறு காரண மின்மை யானும், தலைவன் பிரிந்துழித் தலைவி யாற்றி இருத்தல் கற்பாகலின், இல்லறத் திற்குக் கற்புச் சிறந்தமை பற்றி முல்லை முதல்வைத் தெண்ணினாரெனவே கோடுமெனின்:—அது பொருந்தாது, ஏனைத்திணைகள் அவற்றான் முறை பெறுமையானும், கந்தருவ வழக்கிற் கற்பினுங் களவு சிறந்ததாகலானு மென்பது. இனி நிலம் பற்றியும் பெரும்பொழுது பற்றியும் முறைகோடல் சாலாதாயினும், சிறுபொழுது பற்றி முறைகோடல் சாலுமென்க. ஆண்டு எற்பாடென்றது நாள்வெயிற்காலையேயாம். படுதல் உண்டாதல் என்னும் பொருட்டு. இப்பொருள் காணாதார் எற்பாடு பின்பகலென மயங்கிக் கூறுப. "இலமென் கிளவிக்குப் படுவரு காலை" "இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை" என்னுஞ் சூத்திரங்களில் நச்சினார்க்கினியரும் படுதல் உண்டாத லென் றுரைத்தவாறு காண்க. எனவே, எற்பாடென்றது ஞாயிற்றினுதய மென்றவாறாயிற்று. தலைவன் பிரிந்துழித் தனித்திருந்த தலைவி இராக்கால முழுவதுங் கொன்னே கழிந்தமைபற்றி இரங்குதற்குரிய கால மதுவா மென்பார் "எற்பாடு நெய்தலாதன் மெய்பெறத் தோன்றும்" என்றார். இனி இவ்வாறன்றி, வைகுறு விடியல் என்னும் வினைத்தொகையை வைகுறு வும் விடியலுமென உம்மைத் தொகையாக்கி, வைகறையை வைகுறுவென வும் நாள்வெயிற்காலையை விடியலெனவுங் கொண்டு, இவ்விரண்டும் மருதத் திணைக்குரியன வென்றும், பின்பகலை எற்பாடெனக் கொண்டு அது நெய் தற்குரித் தென்றும், இங்ஙனஞ் சிறுபொழு தறுவகைப்படுமென்று முரைப் பாரு முளர்.

"காலையும் பகலுங் கையறு மாலையு
மூர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்"

என்னுங் குறுந்தொகைப் பாட்டினுட் சிறுபொழுதைந்தே கொண்டமையா னும், பகலெனவே பின்பகலு மடங்குமெனின் அதுபற்றி முன்பகலுமடங்கு மென்றொழியாது காலையை வேறு கூறினமையின் அது கருத்தன் றாகலானும்,

ஆண்டும் வைகறையினையே விடியல் என்றமையிற் காலையை விடியல் என்றல்
பொருந்தாமையானும், இதனானே "விடியல் வெங்கதிர் காயும்" என்புழி
விடியற் பின்னர்த்தாகிய வெங்கதிர் என்பதே பொருளாமாகலானும், விடிதல்
இருள்புலர்தல் என்னும் பொருட்டாகலின், விடியல், புலரி, வைகறை என்பன
ஒரு பொருட் கிளவியாகலானும்,

> "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
> கூடி முயங்கப் பெறின்."

என்பவாகலின், ஊடலிறுதிக்கட் கூடலொருதலை யென்பது பெறப்படுதலின்,
கற்புக்காலத்து நாள் வெயிற் காலையிற் புணர்தல் முறையன்மையின் அக்காலத்
தினூடல் செல்லாமையானும், அடிசில் கைதொட்டபின்னர்ப் பயமின்றிக்
கழியும் பின்பகல் புராணக் கேள்வி முதலியவற்றானாதல் விளையாட்டு முதலிய
வற்றானாதல் பொழுதுபோக்கப்படுவதல்லது விதிக்கப்படும் கருமமொன்றற்கு
முரித்தன்மையின், அதனை யொன்றாக வைத்தெண்ணிச் சிறுபொழு தறுவகைத்
தென்றல் பொருந்தாமையானும், ஆசிரியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்,
பாலை என முறைசெய்தற் கேது மாலை யாமம் வைகறை காலை நண்பகல் என்
னுஞ் சிறுபொழுதின் கிடக்கை முறையேயன்றி வேறின்மையானும், ஏனைத்
திணைகட்குச் சிறுபொழுதொரோ வொன்றேயாகலின், மருத மாத்திரைக்
கிரண்டு கோடல் பொருந்தாமையானும், அஃதுரையன்றென மறுக்க. வைகுறு
விடியல் இராப்பொழுது தன்னோடு கழிவுறுதற் கேதுவாகிய விடியலென்க.
"விளம்பழங் கமழுங் கமஞ்சூழ் குழிசி" என்னும் நற்றிணையுள் வைகுறு புலர்
விடியல் என்றது மப்பொருட்டு. அற்றைநாட்பொழுது தன்னெல்லையோடறுதல்
வைகறை யெனவும் படும். வைகுதல் கழிதல் என்னும் பொருட்டு. "ஆட
லின்னரவமும்" என்னுஞ் செய்யுளின் நச்சினார்க்கினியரும் "வைகறொறும்
வைகின்றே" என்பதற்கு நாடோறுங் கழியாநின்றதெனப் பொருளுரைத்
தார். இவ்வாறன்றி மாலையு மிடையாமமுங் கழியுந் துணையும் அக்கங்குல்
வைகுறுதலின் வைகுறுவாயிற் றென்பார்க்கு, ஏனைப்பொழுதுகளும் தமக்கு
முன்னுளவாகிய பொழுதுகள் கழியுந்துணையுந் தாம் வைகுறுதலின் அவையும்
அப்பெயர் பெறுவான் செல்லுமென்றொழிக. பெரும்பொழு தாறென்றார்க்
குச் சிறுபொழுது மாறென்றலே பொருத்த முடைத்தெனின் :—அங்ஙனங்
கூறுவார்க்கு மருதநெய்தல்கட்குப் பெரும்பொழுதெல்லா முரிய வென்றார்க்
குச் சிறுபொழுதெல்லா முரிய வென்றல் பொருத்த முடைத்தெனல் வேண்டு
தலின், அது கடாவன்றென விடுக்க" என்பது அவர் தொல்காப்பியச் சூத்திர
விருத்தியிற் கூறியதாகும்.

இப்பகுதியில் அவர் மூன்று முக்கிய கருத்துக்களைக் கூறியுள்ளனர்.
1 முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற முறை வைப்பிற்குக் காரணங்
காட்டுதல் ; 2. அதன்பொருட்டு நெய்தலுக்குப் பிற்பகலை விலக்கி முற்பகலைச்
சிறு பொழுதாக அமைத்தல் ; 3. அதனால் பிற்பகல் ஐந்திணைகளுள் எதற்கு
முரித்தன்றென விலக்குதல் என்பவைகளே அம்மூன்று கருத்துக்களுமாகும்.

தொல்காப்பியர் "மாயோன் மேய" என்ற சூத்திரத்தில், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என முறையே கூறிப் பாலையைப் பின்னர்த் தனியே கூறினர். ஆயினும் அச்சூத்திரத்தில் அவரே,

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

என்றதனுல், இம்முறை வைப்பு ஒருதலையன்று; வேறுவகையாகவும் கூறலாம் என்னும் கருத்தையும் வெளியிட்டவராவர். அதற்கேற்பத் தாமே உரிப்பொருள் கூறுகின்ற "புணர்தல் பிரிதல்" என்னுஞ் சூத்திரத்தில் குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என்ற முறைவைப்பைக் கொண்டனர். அகப்பொருளுக்கு மறுதலையான புறப்பொருள் கூறுமிடத்தில், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற முறையைக் கருதியுள்ளனர். பிற்கூறப்பட்ட ஈரிடத்தும் குறிஞ்சி முதற்கண் நிற்பினும் ஏனைய நான்கும் பிறழ்ந்து நிற்றல் காண்க. இவற்ருல் முல்லை முதலிய ஐந்திணைகளுள் இக்காரணத்தால் இது முதலில் இருத்தல் வேண்டும்; இக்காரணத்தால் இஃது அதனை அடுத்து நிற்றல் வேண்டும் என்றிவ்வாருகக் காரணத்தோடு கூடிய ஒருமுறைவைப்பை ஆசிரியர் கருதிற்றிலர் என்பது தெளிவாம்.

இலக்கியங்களிலும் கலித்தொகை, பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தல் என்ற முறைவைப்பையும், ஐங்குறு நூறு, மருதம் நெய்தல் குறிஞ்சி பாலை முல்லை என்ற முறைவைப்பையும் உடையனவாக உள்ளன. கீழ்க்கணக்கில் உள்ள அகப்பொருள் நூல்களும் இங்ஙனமே பலவகையாக உள்ளன. மதுரைக்காஞ்சியில் ஐந்திணைகளையும் மருதம் முல்லை குறிஞ்சி பாலை நெய்தல் என்ற வரிசையிற் கூறி "ஆங்கு ஐம்பாற்றிணையுங் கவினி" என முடித்துள்ளனர் மாங்குடி மருதனர். இவற்ருல் இலக்கணம் இலக்கியம் இரண்டினும் ஐந்திணைகளும் ஒருமுறையில் அமைந்தில வென்பது நன்கு தெளியப்படும்.

அங்ஙனமாகவும் உரையாசிரியர்கள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற முறைவைப்பிற்குக் காரணங் கூறுவாராயினர். முறை வைப்பிற்குக்காரணங் கூறுமிடத்து வலிந்து பொருத்தாது எளிதின் அமையுமாறு கூறுதலே முறையாகும். நச்சினர்க்கினியர், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற முறைவைப்பிற்கு அவ்விடத்திற் கேற்ப ஒருவாறு காரணங் காட்டிச் சென்றனர். சிவஞானமுனிவர் அவர் கொள்கையை மறுத்து, சிறுபொழுதுகளின் வரிசைக் கேற்ப முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற முறை அமைந்தது எனக் கூறினர்.

2. மேற்கூறிய கொள்கைக்குக் காலைப் பொழுது மருதத்திற்கும் பிற்பகல் நெய்தலுக்கு முரியனவென முன்னுள்ளோர் கூறியாங்குக் கொண்டால் முறை பொருந்தவில்லை. நெய்தல் பாலைக்குமுன் னிருக்க அதற்குரிய சிறுபொழுதாகிய பிற்பகல், பாலைக்குரிய நண்பகலுக்குப் பின் இருக்கின்றது.

நெய்தலுக்கு உரிய சிறுபொழுது, பாலைக்குரிய நண்பகலுக்கு முன்னிருந்தால் அவர் கொண்ட வரிசைமுறை யமைவதாக உள்ளது. ஆதலால், வைகறை ஞாயிறு எழுபொழுது என்னும் இரண்டும் மருதத்திற்குரியன என்ற முன்னோர் கொள்கையை விடுத்து, வைகறை மருதத்திற் குரித்தென்றும், ஞாயிறு எழுபொழுதே எற்பாடென்று தொல்காப்பியரால் கூறப்பட்டதென்றும், அது நெய்தற்குரிய சிறுபொழுதென்றும் கொண்டனர். அங்ஙனங் கொண்டு முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற ஐந்திணைகளும், மாலை யாமம் வைகறை எற்பாடு (முற்பகல்) நண்பகல் என்ற சிறுபொழுது ஐந்திற்கும் ஏற்ப வரிசைப்படுத்தப்பட்டன என்று கூறினர். இங்ஙனம் காலைப்பொழுதே எற்பாடென்றும் அது நெய்தற்குரித் தென்றும் கொண்டதற்கு முக்கிய காரணம் முல்லை முதலியவற்றின் முறைவைப்பைப் பொருத்துதலே யாகும். அம்முறைவைப்பிற்கு இங்ஙனம் வலிந்து காரணங் கூறுதல் முறையன்றென்பது முன்னரே கூறப்பட்டது.

முல்லை முதலியவற்றின் முறைவைப்பிற்குக் காரணங் காட்டுதற் பொருட்டுக் காலைப் பொழுதை நெய்தலுக்காக்கினமையின் காலைப்பொழுது நெய்தல் உரிப்பொருளுக்கு ஏற்றதாகுமோ என்னும் வினாவை உளங்கொண்டு, அதற்கு விடையாகத் "தலைவன் பிரிந்துழித் தனித்திருந்த தலைவி இராக்கால முழுவதும் கொன்னே கழிந்தமைபற்றி இரங்குதற்குரிய காலமதுவா மென்பார் "எற்பாடு—நெய்தலாதன் மெய்பெறத் தோன்றும்" என்றார் எனக் கூறுவாராயினர்.

தனித்திருந்த தலைவி இராக்கால முழுவதும் கொன்னே கழிந்தமைபற்றிக் காலைப்பொழுதில் இரங்கினளாக இலக்கியங்களிற் சான்றுகள் காணப்பட்டில. அதற்கு மாறாகப் பிற்பகலில் இரக்கமும், காலைப்பொழுதில் இரக்கந்தணிதலும், மேற்காட்டப்பட்டவாறு இலக்கியங்களிற் காணப்படுகின்றன. தனித்திருந்த தலைவி, இரவிற் கனவின்கண் நிகழ்ந்த கூட்டத்தை நினைந்து, காலைப்பொழுதில் இரக்கந் தணியப் பெறுவாள் என இரக்கந் தணிதற்குக் காரணம் பரிமேலழகர் உரைகொண்டு மேற்காட்டப்பட்டது. பரிமேலழகர் கூறிய அக்கருத்தினைத் திருக்குறளிற் கனவுநிலை யுரைத்தல் என்னு மதிகாரத்திலுள்ள செய்யுட்களிற் காணலாம். அன்றியும் நெய்தற்கலி 11ம் செய்யுளிலும் தெளிவாகக் காணலாம். அச்செய்யுள் இறுதிக்கண்

"கனவின் வந்த கானலஞ் சேர்ப்பன்
நனவின் வருதலு முண்டென
வனைவரை நின்றதென் னரும்பெற லுயிரே."

என வருதல் காண்க. இவற்றால் காலைப்பொழுது இரங்குதற் குரித்தன்று என்பது தெளியப்படும்.

3. காலைப்பொழுதை நெய்தலுக்குக் கொண்டதனால் பிற்பகல் எத்திணைக் குரித்தாவது என்னும் வினாவைக்கருதி, அப்பொழுது ஐந்திணைகளுள் ஒன்றற் கும் உரித்தன்றென்றும், புராணக்கேள்வி முதலியவற்றானுதல் விளையாட்டு முதலியவற்றானுதல் கழிக்கப்படுவதென்றும் கூறியுள்ளனர்.

தொல்காப்பியர் ஓதற்பிரிவென ஒரு பிரிவு வகுத்தனரே யன்றி ஒரு நாளின் கூறுபாடுகளில் புராணக் கேள்விக்கென ஒரு பொழுது வகுத்திலர். இலக்கியங்களினும் அத்தகைய நிகழ்ச்சி காணப்பட்டிலது. தலைவன் தலைவி யோடு கூடியிருக்குங் காலத்தில் ஒருவாறு புராணக் கேள்வி முதலியன நிகழு மாயினும், அவன் தான்கருதிய வினைமேற்கொண்டு பிரிந்துள்ள காலத்தில் புராணங் கேட்டல் முதலியன நிகழ்தல் இயலாது. தலைவிக்குத் துன்பம் பெருகுதலே நிகழ்வதாகும். அன்றியும் களவுக் காலத்திற்கு இந்நிகழ்ச்சி சிறிதும் இயையாது. ஆதலின் அக்கருத்து பொருத்தமில தென்பது தெளியப் படும்.

"நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுகக்
கல்சேர் மண்டிலஞ் சிவந்து நிலந்தணியப்
பல்பூங் கானலு மல்கின் றன்றே
யினமணி யொலிப்பப் பொழுதுபடப் பூட்டி
மெய்ம்மலி காமத் தியாந்தொழு தொழியத்
தேருஞ் செல்புற மறையும்" (நற்றிணை 187)

என நற்றிணைப் பாடலால் தலைவன் பிற்பகலில் வந்து தலைவியைக் கூடிச் சென்றான் என்பது பெறப்படுதலானும்,

"முன்பகற் றலைக்கூடி நண்பக லவணீத்துப்
பிற்பகற் பிறர்த்தேரு நெஞ்சமு மேமுற்றாய்" (மருதக்கலி 9)

என்ற கலித்தொகைப் பாடலால் பிற்பகலில் தலைவன் பரத்தையரை நாடிச் சேறல் உண்மை பெறப்படுதலானும், களவு கற்பென்னும் இருதிறத்தினும் பிற்பகல் உரிப்பொருளுக் குரியதாகக் காணப்படுதலின் அதனை யுரிப்பொருளுக் குரியதாகவே கோடல் வேண்டும்.

காலைப்பொழுது நெய்தற்குரித்தன்றெனின், முன்னோர் கொள்கைப்படி அது மருதத்திற் குரியதாகும். அது மருதத்திற் குரியது என்பதற்கு ஒரு குற்றம் காட்டப்பட்டுள்ளது. மருதத்திற்கு உரிப்பொருள் ஊடல். அவ் வுரிப்பொருளுக்குக் காலைப்பொழுது பொருத்தமின்றென்பது அக்குற்றம்.

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்பவாகலின், ஊடல் இறுதிக்கட் கூடல் ஒருதலே என்பது பெறப்படுதலின், கற்புக்காலத்து நாள்வெயிற் காலேயிற் புணர்தல் முறையன்மையின் அக்காலத்தி னூடல் செல்லாமையானும்" என்ருர்.

பூப்புக்காலத்து மூன்றுநாட்கண்ணும் கூட்டம் நிகழ்தல் ஆகாதென விலக்கினுற்போல, கற்புக்காலத்து நாள் வெயிற்காலேயிற் கூடுதலாகாதென விலக்கிற்றிலர். ஒழுக்கமுறை கருதி விலக்கப்பட்டதெனின்,

"வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை"

என வைகறைக் காலத்துச் செய்தற்குரிய கருமங்கள் விதிக்கப்பட்டிருத்தலின் அக்காலத்திலும் ஊடலுங் கூடலும் ஆகாவாம். எனவே மருதத்திற்குச் சிறுபொழுது வேறு அமைத்தல் வேண்டுமாதலின், அக் குற்றம் பொருந்தா தென்க. அன்றியும்,

"முன்பகல் தலேக்கூடி நண்பகல் அவள்நீத்துப்
பின்பகல் பிறர்த்தேரும் நெஞ்சமு மேமுற்ருய்"

என்றதனுல் கற்புக்காலத்து நாள்வெயிற்காலேயில் தலேவனுக்குக் கூட்டம் நிகழ்தல் உண்டு என்பது பெறப்படுதலானும் அக்குற்றம் பொருந்தா தென்க.

VI

திரு S. கனகசபைப் பிள்ளே யவர்களால் அச்சிடப்பட்ட தொல்காப்பியம் பொருளதிகார உரையில் "வைகுறு விடியல்" என்ற 8ம் சூத்திரத்தின் கீழ்க் குறிப்பில் இரண்டு முக்கிய கருத்துக்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் (1) "அகத்திணேயியலிலே எற்பாடு என்பது நெய்தற்றிணேக் குரித்தாக ஓதப்பட்டது. புறத்திணேயியலிலே

"தும்பை தானே நெய்தலது புறனே"

என்னுஞ் சூத்திரத்தால் நெய்தற்றிணேக்குரிய எற்பாடு என்னுஞ் சிறுபொழுது தும்பைத் திணேக்கும் எய்தியதாயிற்று. இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் தும்பைப்போர் முடியுங்காலம் எற்பாடு (பகலின் மூன்ருங் கூறு) ஆதலின் தும்பை நெய்தற்குப் புறனுயிற்று என்ருர். போர் தொடங்கும் பொழுதைக் குறியாமல் அது முடியும்பொழுதைக் குறித்த தென்றல் பொருந்தா உரையாம்" என்பது ஒன்று. போரின் தொடக்கம் முதல் இறுதிவரை தும்பையே சூடி யிருப்பர். போரின் முடிவில் தோற்றவரொழிய வென்றவர் வாகை சூடுவர்,

எனவே போரின் தொடக்கநேரம் சிறப்பாகக் கொள்ளுதற்குரியதா? இறுதி நேரம் சிறப்பாகக் கொள்ளுதற்குரியதா? என்பது ஆராய்ந்து துணிதற் குரியதாகும். புறத்திணைகளுள் ஒவ்வொன்றை அகத்திணைகளுள் ஒவ்வொன் றிற்குப் புறமாக அமைத்தற்கு முக்கிய காரணம் புறத்திணை நிகழ்ச்சி ஓராற்ருன் அகத்திணை நிகழ்ச்சியோடு ஒப்புடைமையே யாகும். போர் தொடங்கும் காலத்தைக் கொண்டால் தும்பை நெய்தலோடு ஒப்புடைத்தா மாறில்லை. போர் முடியுங் காலத்தைக் கொண்டால் நெய்தலுக்குரிய இரக்கம் தும்பைக்கு ஊத்துவருகின்றது. அதனுல் உரையாசிரியர்கள் போர் முடியுங் காலத்தைக் கொள்வாராயினர்.

"எற்பாடு (பிற்பகல்) போர்த்தொழில் முடியுங்கால மாதலானும், இரக்கமும் தலைமகட்கே பெரும்பான்மை உளதாய வாறுபோலக் கணவனை இழந்தார்க் கன்றி வீரர்க்கு இரக்கமின்மையானும், அவ்வீரக் குறிப்பின் அருள்பற்றி ஒருவர் ஒருவரை நோக்கிப் போரின்கண் இரங்குப வாகலானும், ஒருவரு மொழியாமற் பட்டுழிக் கண்டோசிரங்குப வாகலானும் பிற காரணங்களானும் நெய்தற்குத் தும்பை புறனுயிற்று" என்ற நச்சினுர்க்கினியர் உரை பொருத்தமுடையதாகும். "வருதார் தாங்கி யமர் மிகல் யாவது" என்ற புறநானூற்றுப் பாட்டு இருவரும் வீழ்ந்தவிடத்துக் கண்டோர் இரங்கிக் கூறியதாகும்.

முலைபொலி யாகம் உருப்ப நூறி
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
அவிரறல் கடுக்கு மம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே (புறம் 25)

என்ற புறநானூற்றுப் பாட்டில் போரில் இறந்த வீரரைக் குறித்து அவர் மனைவியர் இரங்கியது காண்க. (இப்பாட்டில் வென்ற அரசன் பெருமை கூறுதல் முதன்மையாகக் கொள்ளப்பட்டமையின் இப்பாட்டு வாகைத்திணை யாயிற்று.) புறநானூறு 23ம் பாட்டில்,

"அருமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளில் அத்தம் ஆகிய நாடே"

என்ற பகுதி, இறந்த வீரரின் மனைவியரது நிலையைக் குறிப்பானுணர்த்தும் என அதன் உரையாசிரியர் கூறியுள்ளார். அதனுல் இப்பகுதியும் இறந்த வீரர்களின் மனைவியரது இரக்கநிலை யுணர்த்துவதாகும். இவ்வாறு போரி லிறந்த வீரரைக் குறித்து அவர் மனைவியரும் கண்டோரும் இரங்குதல்

காணப்படுகின்றமையின், அவ்விரக்கம் போர் முடிவில் நிகழ்தற்குரியதே யாகலின் போர் முடியும் நேரத்தைத் தும்பைக்குக் கொண்ட உரையாசிரியர்கள் கொள்கையே பொருத்தமுடையதாதல் காண்க.

மேற்கூறப்பட்ட 8ம் சூத்திரக் கீழ்க்குறிப்பில் இராமாயணப் பாட்டுக்கள் மூன்று உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன. அவை தும்பை சூடிப் போர்க்குப் புறப்படுதலைக் குறிப்பனவே. அதனால் போர்க்குப் புறப்படும் காலை நேரம் நெய்தலுக் குரித்தாகாது. அப்பாக்களில் போர்க்குப் புறப்படுதல் கூறப்பட்டதே யன்றி இரக்கம் கூறப்படவில்லை. அந்நேரம் இரக்கத்திற் குரிய தன்மையின் கூறப்பட்டிலது. அதனால் இரக்கத்திற் குரியதாகிய போர் முடிவு நேரத்தைக் கொள்ளுதலே பொருத்தமாகும்.

2. "இறையனார் களவியற் பொருள் கண்ட எல்லோருக்கும் முற்பட்டவராகிய நக்கீரனார் சிறுபொழு தைந்தென்றே கொண்டார். அவர் வைகறை வேறு விடியல் வேறு என்று கொள்ளாது வைகறை ஒன்றே கொண்டார். அவர் எற்பாடு என்பதற்கு விளக்கமான பொருள் கூறிற்றிலரேனும், திருமுருகாற்றுப்படையில்

"முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி எற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்"

என்றதனால் எற்படு காலம் நாள்வெயிற்காலை யென்றே கருதினராகும். அதனுரையிலே நச்சினார்க்கினியரும் 'எற்பட' என்பதற்கு ஞாயிறு தோன்றின காலத்தே என்று பொருள் கூறினர். இதனால் எற்பாடு என்பது வைகறை என்பதனை அடுத்த சிறுபொழுதே என்பது முடிந்தது" என்பது மற்றொன்று.

படுதல் என்பது தோன்றுதல் அழிதல் என்னு மிருபொருளுந் தருமாதலின், தோன்றுதல் என்னும் பொருளில் வந்த இதனைக்கொண்டு, தொல்காப்பியச் சூத்திரத்திற்கும் இதுவே கருத்தென முடிவு செய்தல் பொருந்தாதாம். அப்பொழுது, நெய்தற்றிணைக்குரிய இரக்கத்திற்கும், அத்திணைபற்றிய இலக்கிய ஆட்சிக்கும் பொருத்தமுடையதா என்பது கருதித் துணிதலே பொருத்தமாகும். அங்ஙனங் காணுமிடத்துக் காலைப்பொழுது பொருந்தாமையும் பிற்பகலே பொருத்தமாதலும் மேலே காட்டப்பட்டன.

"பல்பூங் கானற் பகற்குறி மரீஇச்
செல்வல் கொண்க செறித்தனள் யாயே
கதிர்கால் வெம்பக் கல்காய் ஞாயிற்றுத்
திருவுடை வியனகர் வருவிருந் தயர்மார்
பொற்றொடி மகளிர் புறங்கடை யுகுத்த
கொக்குகிர் நிமிரன் மாந்தி எற்பட

அகலங் காடி யசைநிழற் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பிற் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினத் தன்ன விவள்
நெருங்கே ரெல்வளை யோடுவ கண்டே."

என்ற நற்றிணை 258ம் பாட்டும் நக்கீரனார் பாடியதே. இதன்கண் நண்பகற் பொழுதில் மகளிர் புறங்கடையிட்ட சோற்றையுண்ட காக்கை, அதன்பின் எற்பாட்டின்கண் அகலங்காடியில் குவிக்கப்பட்ட இறாமீனைக் கவர்ந்துண்டு, பின்னர் வங்கத்தின் பாய்மரத்திற் சென்று தங்கும் என்றார். இங்கு எற்பட என்றது ஞாயிறு வீழ்பொழுதையே குறித்து நிற்றல் காண்க. மேற் காட்டப் பட்ட திருமுருகாற்றுப் படையினும் நெய்தற்றிணைக் கென்றே பாடப்பட்ட இச்செய்யுள் சிறந்த சான்றாகுமென்க.

இதுகாறுங் கூறியவற்றால் ஞாயிறு எழுபொழுதாகிய காலைப்பொழுது நெய்தல் உரிப்பொருளாகிய இரங்கலுக்குப் பொருந்தாதென்பதும், ஞாயிறு வீழ்பொழுதாகிய பிற்பகலே இரங்கலுக்குப் பொருத்தமாவதென்பதும் அதனால் தொல்காப்பியச் சூத்திரத்திலுள்ள 'எற்பாடு' என்பதற்கு ஞாயிறு வீழ் பொழுதே பொருளா மென்பதும் தெளிவாம்.

தொல்காப்பியர்க்குப் பின்னுள்ள உரையாசிரியர் நூலாசிரியர்களுள் ஒரு சாரார் சிறுபொழுது ஆறென்றும், மற்றொரு சாரார் சிறுபொழுது ஐந்தென் றும் கொண்ட அவற்றுள் எது பொருத்தமுடைத் தென்பது ஆராயத்தக்கது.

தொல்காப்பியச் சூத்திரத்திலுள்ள "வைகுறு விடியல்" என்ற தொடர் உம்மைத் தொகையாகவும் வினைத்தொகையாகவும் கொள்ளுமாறிருத்தலானும், நூல்களில் சில இடங்களில் வைகறையும் விடியலும் வேறெனக் கொள்ளுமா றும், சில இடங்களில் ஒன்றெனக் கொள்ளுமாறும் கூறப்பட்டிருத்தலானும் இங்ஙனங் கொள்கை வேறுபாடு எழுந்ததெனக் கொள்க.

சிலப்பதிகாரம் கடலாடு காதையில்,

"பொய்கைத் தாமரைப் புள்வாய் புலம்ப
வைகறை யாமம் வாரணங் காட்ட
வெள்ளி விளக்கம் நள்ளிருள் கடிய."

என்ற பகுதியால் வைகறையாமம் இருளுடைய தென்பதும், அக்காலத்திருளை வெள்ளியாகிய மீன் ஒருவாறு கடியுமென்பதும் பெறப்பட்டன. அக்காலத் தில் கடற்கரையிலுள்ள பல்வகைக் கடைகளிலும் விளக்கு வைக்கப்பட்டிருந் தமை அக்காதையினிறுதிக்கண் கூறப்பட்டிருத்தலும் வைகறை இருளுடைய தென்பதை உணர்த்தும். நாடுகாண் காதையில்,

"வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்க."

என்ற பகுதியில் வைகறையில் ஞாயிற்றொளி யின்றென்றும், வானத்தில் மீன்கள் விளங்குமென்றும் கூறப்படுதல் காண்க.

விடிதல் இருள்புலர்தலே புணர்த்துமாதலின், இருளையுடைய வைகறையும், இருள்நீங்கிய விடியலும் ஒன்றெனக் கொள்ளாது வேறெனக் கோடலே பொருத்தமாகும். புலரி, விடியல் என்பன ஒருபொருட் கிளவி. பரிபாடலில்,

> "திறப்பயம் பாடி விடிவுற் றேமாக்க."—(7–85)

என்றவிடத்தில் விடிவுறுதல்—துன்பம் நீங்கி இன்பமாதல் என்றார் பரிமேலழகர். விடிதல்—இருள்நீங்க ஒளியுண்டாகும் பொழுதாதலின் அதுபோலத் துன்பம் நீங்கி இன்பமாதல் என்னும் பொருள் கொள்ளப்பட்டது. சிலப்பதிகாரம் காடுகாண் காதையில்,

> "வைகறை யாமத்து வாரணங் கழிந்து
> வெய்யவன் குணதிசை விளங்கித் தோன்ற
> வளநீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்ததோர்
> இளமரக் கானத் திருக்கை புக்குழி."

என்ற பகுதியில், கோவலன் கண்ணகி கவுந்தியாகிய மூவரும் வைகறைக் காலத்திற் புறப்பட்டு உறையூரைக் கடந்து, ஞாயிறு தோன்றியபின் இளமரக் காவை யடைந்தனர் என்றார். இப்பகுதியில் வைகறையும் ஞாயிறு தோன்றியபொழுதும் வேறுவேறாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

> "பெரும்புலர் விடியல் விரிந்து வெயிலெறிப்ப" (அகம் 63)
>
> "விடியல் வெங்கதிர் காயும் வேயம லகலறை" (கலித்தொகை)

என்ற அகநானூறு கலித்தொகைப் பகுதிகள் விடியற்காலம் ஞாயிற்றொளியை யுடையது எனத் தெளிவாகக் கூறுகின்றன.

சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தில்,

> "பஞ்சி யடிப்பவ ளத்துவர் வாயவள்
> துஞ்சுமி டைக்கன மூன்றவை தோன்றலின்
> அஞ்சி நடுங்கின ளாயிழை யாயிடை
> வெஞ்சுடர் தோன்றிவிடிந்ததை யன்றே" (சீவக. 219)

என்ற செய்யுளில் இறுதியடியில் விடியற்காலத்தில் ஞாயிற்றின் எழுச்சி கூறப்பட்டது காண்க. தோன்றி யென்னும் எச்சத்தைத் தோன்ற எனத் திரித்து வெஞ்சுடர் தோன்ற விடிந்தது எனக் கொள்க: தோன்ற என்பது காரண காரியப்பொருள்களில் வரவில்லை. பொழுதும் விடிந்தது வெஞ்சுடரும் தோன்றிற்று என இரண்டும் ஒருங்கு நிகழ்ந்தன என்னும் பொருளில் வந்தது,

இவற்ருல் வைகறை யிருளுடையபொழுது; விடியல் ஞாயிறு எழும் பொழுது; இவை இரண்டும் வேறுவேறு பொழுதுகள் என்பன தெளிவாயின. இவற்றிற்கு மாருக இரண்டும் ஒன்றெனக் கொள்ளுமாறு நூல்களிற் காணப்படுமிடங்களுக்கு இவற்றிற்கு ஏற்றவாறு பொருளமைத்துக் கோடல் வேண்டும். அங்ஙனமே உரையாசிரியர்கள் அமைத்துக் கூறியுள்ளனர்.

சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில்,

"புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்பொதி யவிழ்த்த உலகுதொழு மண்டிலம்
வேந்து தலைபனிப்ப வேந்துவாட் செழியன்
ஓங்குயர் கூட லூர்துயி லெடுப்ப"

என்ற பகுதியில் "புலரி வைகறை" என்பதற்கு அடியார்க்குநல்லார் 'வைகறைக் காலக் கழிவும் புலருதன் முன்னுமாகிய அக்காலத்தே' என்று உரை கூறினர். வைகறை இருளுடைய நேரம் என்று முன் சிலப்பதிகாரத் திலே கூறப்பட்டிருத்தலின், அதனைப் புலரி வைகறை என்றல் பொருந்தாமை யானும், "வான்கண் விழியா வைகறை யாமத்து" என்று முன் கூறப் பட்டமையின் அவ் வைகறைக் காலத்தே உலகு தொழு மண்டிலமாகிய ஞாயிறு தோன்றி ஊர் துயி லெடுத்தல் கூடாமையானும் அங்ஙனம் உரை கூறுவாராயினர்.

"பெரும்புலர் வைகறைச் சீர்சா லாதே"

என்ற புறநானூற்றுப் (177) பாடற் பகுதிக்கு அதன் உரையாசிரியர் "பெரிய புலர்ச்சியை யுடைய விடியற்காலத்துச் சீருக்கு நிகரொவ்வாது" என்றுரை கூறினர். ஈண்டு வைகறைக்குப் "பெரும்புலர்" என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதனுல், வைகறைக்கால மெனக் கூறுதல் பொருந்ாதெனக் கருதி விடியற்காலம் என உரைத்தனர். வைகறையும் விடியலும் ஒன்றெனப் பொருள் படுமாறு வரும் இடங்களுக்கு இவ்வுரையாசிரியர்களின் போக்கிற் கேற்பப் பொருளமைத்துக் கோடல் வேண்டும்.

இங்ஙனம் வைகறையும் விடியலும் வேறு வேறு தன்மை யுடையனவாகக் காணப்படுதலின் மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு எனச் சிறுபொழுது ஆறெனக் கோடலே பொருத்தமாகும்.

EXCHANGE LIST

The Servant of India Society.
Hindustan Review.
Half Yearly Journal of the Mysore University.
Economica, London.
Philosophical Quarterly.
Journal of the Indian Chemical Society.
Reading University Gazette.
Mysore Economic Journal.
Chemical Abstracts, Easton P.A.
The Punjab University Gazette.
Journal of the Bombay University.
Quarterly Journal of the Mythic Society.
Publications by the Oriental Library, Baroda.
Publications by Kungl Universities Bibliotek, Uppasala, Sweden.
Publications by Tohoku Imperial University, Sendai, Japan.
Journal of the Madras University.
Bulletin de L'Ecole Francaise d'Extreme-Orient—Ecole Francaise d'Extreme-Orient, Hanoi (Indo-China).
Djwa—Java-institute, Kweekschoollaan, Jogajkarta, Java.
Varendra Research Society, Rajshahi, Bengal—Annual Report and Monographs.
Quarterly Journal of the Kannada Literary Academy,
Journal of the Andhra Historical Research Society.
Indian Culture.
Scripta Mathematica.
Indian Historical Quarterly, Calcutta.
Publications of the Bombay Royal Asiatic Society.
The Indian Library Journal.
Review of Philosophy and Religion.
U. S. S. R. Society for Cultural relations with foreign countries, Russia.
'**Drama**' *published by the British Drama League, London.*
Proceedings of the Durham Philosophical Society, Newcastle.
Collected papers from the Faculty of Science, Osaka.
Bulletin of the Calcutta Mathematical Society.

Science and Culture, Calcutta,

Indian Co-operative Review, Madras,

Epigraphica Indica.

Spolia Zeylanica.

Publications of the R. Swedish Academy of Sciences, Stockholm.

Bijendragen Tet De Taal, Land-En Volken Kunde Van Nederland Sch-Indie-s-Gravenhage.

Monthly Weather Report, Poona.

Scientific Reports of the Imperial Institute of Agricultural Research.

The Aryan Path.

The Mimamsa Prakash.

Indiana.

Vishwa Vani—A journal of Indian Renaissance.

Journal of the Madras Geographical Association.

Man in India.

The Poona Orientalist.

Publications by the Industrial Intelligence and Research Bureau, Simla.

The Mathematical Teacher, New York.

Duke Mathematical Journal.

Publications of the Brown University, U. S. A.

Transactions of Tbilissian Mathematical Institute, Russia.

Lingnan Science Journal.

London University Gazette.

The Adyar Library Bulletin.

ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

	Name of Publication	Author	Rs.	A.	P.
	History				
1	Bhoja Raja ..	Prof. P.T. Srinivasa Ayyangar ..	1	8	0
2	The Nayaks of Tanjore ..	Rao Bahadur C. S. Srinivasachariar and Mr. Vridhagirisan ..	4	8	0
3	History of Gingee ..	Rao Bahadur C.S. Srinivasachariar	4	0	0
4	Indian History in Tamil ..	Rao Bahadur C S. Srinivasachariar and S. K. Govindaswami ..	2	8	0
	Economics				
5	Factory Labour in India ..	Prof. A. Mukhtar ..	3	0	0
6	The Distributive Co-operation in India ..	Mr. V. G. Ramakrishna Ayyar ..	1	0	0
7	The Madras Agriculturists' Relief Act—A study ..	Dr. B. V. Narayanaswami Nayudu and P. Vaidyanathan, M.A. ..	..		
8	Report on the Working of Prohibition in Salem ..	C. Jaganathachari, M.A., M. Litt. ..	..		
9	Madras Sales Tax Act ..	Dr. B. V. Narayanaswami Nayudu and S. Thiruvengadathan ..	1	8	0
10	Road and Rail Transport .. (Sold out)	Dr. B. V. Narayanaswami Nayudu and S, R. N. Badri Rao ..	5	0	0
11	Ground Nut ..	Dr. B. V. Narayanaswami Nayudu and P. S. Hariharan ..	1	8	0
12	Text-book in Economics in Tamil ..	Mr. V. G. Ramakrishna Ayyar ..	2	0	0
13	The Indian Trade (not in stock)	Dr. B. V. Narayanaswami Nayudu	2	0	0
	Philosophy				
14	Naveena Tarkam (in Tamil) ..	Mr. K. R. Applachariar .	2	0	0
15	Educational Psychology in Tamil (Not in stock) ..	Prof. K. R. Appalachariar and Prof. R. Ramanujachari ..	1	0	0
	Physics				
16	A Text-book in Tamil on Physics Vol. I ..	Mr. R. K. Visvanathan ..	3	0	0
17	Do. Vol. II ..	Do. ..	2	0	0
18	Acoustics (in Tamil) ..	Mr. R. K. Visvanathan ..	1	8	0

	Name of Publication	Author	Rs.	A.	P.
	Chemistry				
19	A Text-book in Tamil on Chemistry, Vol. I ..	Mr. N. Ananthavaidyanathan ..	3	0	0
20	Do. Vol. II ..	Do. ..	2	8	0
21	Practical Chemistry for Intermediate Students ..	Mr. M. L. Sitaraman ..	2	8	0
	Botany				
22	A Text-book in Tamil on Botany ..	Dr. T. S. Ragahvan ..	3	0	0
	Tamil				
23	Pari Pattu ..	Bhasha Kavisekara Vidvan R. Raghava Ayyangar ..	2	0	0
24	History of Tamil Literature ..	Do. ..	3	0	0
25	Advanced Studies in Tamil Prosody ..	Dr. A. Chidambaranathan Chettiar ..	2	0	0
	Sanskrit				
26	Text and commentary of Tattvavibhavana by Parameswaran, a commentary on Vacaspati Misra's Tattva-bindu ..	Mr. V. A. Ramaswami Sastriar ..	3	0	0
27	Jagannatha Parditha ..	Mr. V. A. Ramaswami Sastriar ..	2	0	0
28	Sri Mukundamala ..	Prof. K. Rama Pisharoti ..	3	0	0
29	Svarasidhanta Chandrika ..	Srinivasayajvan Edited by Mr. K. A. Sivaramakrishna Sastri ..	5	0	0
30	Trimsacchloki ..	Sri V. Subramanya Sastri ..	0	8	0
31	Nyayakulisa ..	Edited by Prof. R. Ramanujachari and Pandit K. Srinivasacharya	2	8	0
32	Nitimala ..	Do. ..	2	0	0
33	Philosophy of Aesthetic pleasure ..	P. Panchapagesa Sastri ..	3	0	0
34	Lectures on Patanjali's Mahabashya ..	Dr. P. S. Subramanya Sastriar ..	3	0	0
	General				
35	The University Journal ..	Editor Annual Subscription Rs. 7 (Inland) 10's (Foreign)			

	Name of Publication	Author	Rs.	A.	P.
36	Raja Sir Annamalai Chettiar's Commemoration Volume		..10	0	0
	Music				
37	Swaramelakalanidhi. ..	Mr. M. S. Ramaswami Ayyar	.. 2	0	0
38	Tamil Isai Music Series :				
	Volume I ..		.. 2	0	0
	„ II ..		.. 3	0	0
	„ III ..		.. 2	0	0
	„ IV (Sold out ..		.. 2	0	0
	„ V ..		.. 1	8	0
	„ VI ..		.. 3	0	0
	„ VII ..		.. 2	0	0
	ADDITIONAL PUBLICATIONS				
	History				
	Maratha Rule in the Carnatic..	Sri C. K. Srinivasan	.. 3	0	0
	Tamil				
	Historical Tamil Reader ..	Dr. P. S. Subramanya Sastri	.. 2	8	0
	Tolkappiam-Collathikaram ..	Do.	.. 5	0	0
	Endowment Publications				
	Kambar Memorial Prize Selections ..		..	..	
	Adi Kumaraguruparar Selections ..		..	..	
	Sekkilar Selections ..		..	..	
	Tevara Tirumurai-Prelimi—nary ..		..	..	
	Tamil Isai Music Series				
	Volume V Part 2 ..		.. 1	4	0
	„ VIII ..		.. 3	0	0
	„ IX ..		.. 3	0	0
	„ X ..		.. 3	0	0

For Copies Apply to :—

The Registrar. Annamalai University, Annamalainagar.

PUBLICATIONS

OF

THE INTER-UNIVERSITY BOARD, INDIA.

1.	Handbook of Indian Universities ..	2	0	0	*or* 3*s*
2.	Facilities for Oriental Studies and Research at Indian Universities ..	0	8	0	
3.	Facilities for Scientific Research at Indian Universities ..	0	12	0	
4.	Bulletin of the Inter-University Board, India, No. 1 to 13. ..	1	0	0	each
5.	Biological Outlook on life and its Problems.— By J. Arthur Thomson, M. A., LL. D., Regius Professor of Natural History, University of Aberdeen ..	0	2	0	
6.	Third Conference of Indian Universities ..	1	0	0	
7.	Training of Teachers in Indian Universities ..	0	8	0	
8.	Annual Report of the Inter-University Board for 1935-36 ..	1	0	0	
9.	Bibliography of Doctorate Theses in Science and Arts accepted by Indian Universities from January, 1930 ..	0	8	0	

POSTAGES AND V. P. CHARGES EXTRA.

Available from

THE BANGALORE PRESS,

"LAKE VIEW"

Mysore Road, Bangalore City.

MYSORE ECONOMIC JOURNAL

The only Journal of its kind published regularly on the 7th of each month for over twenty years. Has a number of contributors and reviewers attached to it. Bright and topical in its contents, it has ever stood out for progressive and suggestive comments on public affairs and well being. Sir Roper Lethbridge called it the "Most admirable Journal". Annual subscription Rs. 6.

From the Book Department, books on economic matters can be always ordered. The following books are available for sale from stock:

PLANNED ECONOMY FOR INDIA by Sir M. Visvesvaraya, K.C.I., LL. D. Price Rs. 6.

MADURA SOURASHTRA COMMUNITY by K. R. R. Sastry, M.A., M.L., F.R. ECON. S. Price Re. 1.

INDIAN CASTE SYSTEM by C. Hayavadana Rao, B.A, B.L., F. R. ECON. S. Price Re. 1

STUDIES IN RURAL ECONOMICS by S. Kesava Iyengar, M.A. Price Rs. 8.

TOWARDS NATIONAL SELF SUFFICIENCY by Dr. P. J. Thomas, M.A., B.LITT., PH.D. Price As. 4.

MYSORE GAZETTEER (3 VOLS.) Edited by C. Hayavadana Rao, B.A. B.L. Price per set Rs. 20. Can also be had in parts at prices varying from Rs. 2 to Rs. 8 per volume.

Postage extra in all cases

Apply to:—

MANAGER, "Mysore Economic Journal",
No. 19, Gundopunt Buildings Siddicutta,
BANGALORE CITY.

THE INDIAN LIBRARY JOURNAL, BEZWADA.

The Official organ of the All-India Public Library Association. Expounds the various phases of Library Science and the Library Movement in India.

Annual Subscription Rs. 3.

RATES OF ADVERTISEMENTS

Particulars	Per Issue			Per Two Issues		
	Rs.	A.	P.	Rs.	A.	P.
Back Cover	15	0	0	28	0	0
Inside Back Cover	10	0	0	18	0	0
Inside Page	8	0	0	15	0	0
Inside Half Page	4	0	0	8	0	0